
# கலைச்செல்வி

KALAICHELVI



பங்குனி - சித்திரை 1965 7-4 25 சத

வியாபாரிகளே!

# நல்ல காலம் வந்துவிட்டது!

## நல்ல காலம் வருமா என்ற
## ஏக்கம் நீங்கிவிட்டது!

சமூக ஒற்றுமை
தேச முன்னேற்றம்
பொருளாதார வளர்ச்சி
கலாச்சார எழுச்சி
முதலியவற்றிற்காக
உழைக்கும் தேசீய
அரசாங்கத்திற்கு
ஒத்துழைப்புத் தாருங்கள்.

## கலை, இலக்கிய வளர்ச்சிக்கு உழைக்கும்
## "கலைச்செல்வி"யை ஆதரியுங்கள்.

உங்கள் விளம்பரங்களை
"கலைச்செல்வி"யில் வெளியிடுங்கள்

விளம்பர விகிதங்களுக்கு:

## கலைச்செல்வி

கலாதேவி அச்சகம், சுன்னாகம்.

# TAMIL DIRECTORY

## புதிய 1965 - 66 பலகுறிப்பு

ஆங்கிலத்தில் எத்தனையோ 'டைரக்டரிகள்' வெளியாகின்றன. சிங்களத்திலும் சில ஆண்டுகளாக ஒரு 'டைரக்டரி' வெளியாகின்றது. தமிழிலோ சென்ற ஆண்டிற்றான் முதன் முதலாக ஒரு டைரக்டரி வெளிவந்தது. அதுதான்:-

# 'வரதரின் பலகுறிப்பு'

- யாழ்தேவி கொழும்பிலிருந்து எத்தனைக்குப் புறப்படும்?
- சுதேச வைத்தியர்கள் எங்கெங்கிருக்கிறார்கள்?
- நெருப்பணைக்கும் படையினரின் முகவரி என்ன?
- நல்லூர் கந்தசுவாமி கோவில் தேர் எப்போது?
- விதைப்புக்கு ஏற்ற நாள் எது?
- விழாவுக்குத் தலைமைதாங்க எப்பிரமுகரை அழைக்கலாம்?
- ஒரு வியாபாரத் தலத்திலிருந்து ஒரு தொழிலாளி அறிவிக்காமல் விலகியபோது எந்தப் பத்திரமூலமாக ஊழியர் சேமலாப நிதி அலுவலகத்துக்கு அறிவிக்கவேண்டும்?

இப்படி ஒவ்வொரு நாளும் ஏற்படும் ஓராயிரம் சந்தேகங்களுக்குச் சரியான விடைதரவல்லது 'வரதரின் பலகுறிப்பு' ஒன்றே.

**இந்நூலின் 1965-66க்கான 2ம் பதிப்பு அற்புதமான சிறப்புக்களோடு எதிர்வரும் மேமாதம் வெளியாகும்.**

## விலை ரூ. 10.00 மட்டுமே

இப்பொழுதே பணத்தைக் கட்டிப் பதிவு செய்து கொண்டால் பார்சல் செலவின்றி ஒரு பிரதி உங்களுக்கு அனுப்பிவைக்கப்படும். அத்துடன் உங்கள் பெயரும் 'முகவரிகள்' என்ற பகுதியில் இடம்பெறும்.

இன்றே விண்ணப்பியுங்கள்:

# வரதர் வெளியீடு

**226, காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம்**


ஸ்டீம் பீடி
ஸ்பெஷல்
புத்துணர்வை
ஊட்டும்
உயர்ந்த பீடி
STEAM
BEEDI
SPECIAL
STEAM JADI BEEDI
ஸ்டீம் ஜாடி பீடி
யூனியன் கம்பெனி
N.B. ABDUL GAFOOR
102/2, WOLFENDHAL St., COLOMBO-13
PHONE: 4929. GRAM: GAFOORBIDI.

தமிழ், சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு

மிகப்பிரசித்தி பெற்ற

சுன்னாகம்

# பிறின்ஸ் ஸ்ரூடியோ

தரும்

## தங்களது 11ஆவது வருட விசேஷ நற்செய்தி

## 5-3-65 முதல் 25-4-65 வரை

ஸ்ரூடியோவில் பிடிக்கப்படும் எல்லா போட்டோக்களுக்கும்

# அரைச் சலார்

## விசேஷ ரொக்கப் பரிசுகள்:

- 25 ரூபாய்க்குக் குறைவில்லாது வரும் ஓடர் சிட்டை இலக்கங்களிலிருந்து எடுக்கப்படும் மூன்று அதிர்ஷ்ட எண்களுக்கும் முறையே ரூ. 25, ரூ. 15, ரூ. 10 ரொக்கப் பரிசுகளாகக் கொடுக்கப்படும்.
- ஏனைய சிட்டை எண்களிலிருந்து எடுக்கப்படும் இன்னும் ஐந்து அதிர்ஷ்ட இலக்கங்களுக்கும் ஒவ்வொன்றுக்கும் ரூ. 5 வீதம் ரொக்கப் பரிசு கொடுக்கப்படும்.

## 26-4-65ல் அதிர்ஷ்ட எண்கள் இழுக்கப்படும்

முழுத்தொகையும் முன்னதாகவே கட்டப்படவேண்டும்.

வேலைநேரம்: காலை 7.30 முதல் மாலை 7.30 வரை (ஞாயிறுஉட்பட

தரத்தில் உயர்ந்த
தங்க வைர நகைகளுக்கு



பொ. அம்பலவாணர்
119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்



உங்கள் கண்ணைப்
பாதுகாக்க

★

இலவசமான கண்பரிசோதனை

★

அழகு மிக்க கண்ணாடி பிரேம்கள்

★

அப்துல்லா அன் கோ
127, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி 486



# கலைச்செல்வி

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்

—பாரதியார்

கலை: 7 | பங்குனி-சித்திரை 1965 | காட்சி: 4

## பொருளடக்கம்

1 தமிழ் செய்வோம்
2 அன்பார்ந்த நேயர்களே
3 திருக்குறள் கீர்த்தனை
4 பேரும் பரிசும்
5 பலதும் பத்தும்
6 மணிமாலை
7 பிரமை
8 தவிப்பு
9 கூட்டுறவு
10 கால ஓட்டத்திலும்
11 இலக்கிய மணிமண்டபம்
12 சினிமாச் செய்திகள்
13 பட் பட்

அடுத்த இதழில்:-

கவிஞர் "அம்பி"யின் இலக்கியப் பெண்.
நம் நாட்டு வாசகர்கள்.
பத்தாம் பக்கம்.
பேட்டி: கன்னடத்துப் பைங்கிளி.

அடுத்த இதழ் மே 1ந் திகதி வெளியாகும். தொடர்ந்து ஒவ்வொரு ஆங்கில மாதம் முதலாம் திகதியிலும் "கலைச் செல்வி" வெளிவரும்.







தயாரிப்பாளர்கள்:-
RVG பீடிக் கம்பெனி,

## உங்கள் வயது 18க்குமேற்பட்டுவிட்டதா?

**அப்படியாயின், உங்கள் சரியான விலாசம் எழுதப்பட்ட முத்திரையுடன் கூடிய தபால் உறையொன்றை அனுப்புங்கள்.**

உங்களுக்குத் தேவையானவை, உங்கள் குறைபாடுகள், மனதில் இருக்கும் யாவற்றையும் நான் அறிவேன். நான் அனுப்பும் அந்த விபரங்களைப் பார்ப்பதினால் நீங்கள் புதுமை அடைவீர்கள். ஆண்-பெண் பேதம் அல்லது மதபேதம் இல்லை. இன்றே உங்கள் விலாசத்தை அனுப்பி உங்கள் வாழ்க்கையைப் பற்றி நான் கூறும் விபரங்கள் உண்மையானவையா எனப் பாருங்கள். இன்னும் எந்த வகையான காரணத்திற்காகவோ மனவேதனை, தொல்லை, துன்பம் இருப்பின் அதைத் தீர்த்துவைத்து எண்ணத்தை நிறைவேற்றித் தருவேன். இரகசியம் வெளியிடப்படமாட்டாது.

**பதிவு செய்யப்பட்ட மாந்திரீக கலாநிதி**

## பி. எம். திசநாயக்க,

ஆருத எண்ணெய் தலைமைக் காரியாலயம்,

**கம்பளை.**



## படிமுறை அட்சர கணிதம்

108 நாட்களுக்குரிய பாடவிதானமும் பயிற்சிகளும் விடைகளும் கூடியது.

பாடநூற் பிரசுரசபையின் அங்கீகாரம் 1967 டிசம்பர் வரை பெற்றது.

**ஆக்கியோன்:**

## A. J. ஆசீர்வாதம் B. Sc. (Lond)

(ஆசிரியர் சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்)

6ம் வகுப்புப் படிமுறை அட்சர கணிதம் - 1.60

7ம் வகுப்புப் படிமுறை அட்சர கணிதம் - 1-60

உங்கள் பிரதிகளுக்கு:-

## ஆசீர்வாதம்

**அச்சகம் சக புத்தகசாலை**

**32, கண்டி வீதி யாழ்ப்பாணம்.**

தொலைபேசி: 274

## புத்தாண்டு பிறக்கிறது!

தமிழ்ப்புத்தாண்டைக் கொண்டாட, எங்கள் கைத்தறித் துணிகளை வாங்கி உபயோகியுங்கள்.

**சேலைகள்**

**வேட்டிகள்**

**துவாய்கள்**

**சால்வைகள்**

- கண்ணுக்குக் கவர்ச்சியளிப்பவை
- நீடித்துழைப்பவை
- விலை மலிவானவை.

**வள்ளுவன் கைத்தறி நிலையம்,**

**அளவெட்டி.**

# தமிழ் செய்வோம்

செந்தமிழ், பைந்தமிழ், தீந்தமிழ், தெய்வத்தமிழ், கன்னித் தமிழ், கன்னற்றமிழ் என்றெல்லாம் நந்தமிழ் மொழியைப் போற்றியும் ஏற்றியும் புகழ்ந்தும் கூறுவதில்- நாம் அலுப்படைவதில்லை; சலிப்படைவதில்லை.

இறைவன் தந்த தமிழ்தான் — ஏற்றுக் கொள்கின்றோம்.
அகத்தியன் வகுத்த தமிழ்தான் — ஒப்புக்கொள்கின்றோம்.
வள்ளுவனும் கம்பனும் வளம்படுத்திய தமிழ்தான் — மறுக்க [வில்லை நாம்.

ஆனால்...?

வாழும் இனம் தமிழினம். வாழவேண்டிய, வளரவேண்டிய இனம் தமிழினம் ஓரினத்தின் பரிபூரண வளர்ச்சிக்கு அவ்வினத்தின் சொந்தமொழி சக்திவாய்ந்த கருவியாகின்றது என்பது உண்மையானல், நம்மை நாமே ஒன்று கேட்டுக் கொள்ள வேண்டும்: இன்றைய நிலையில், தமிழினத்தின் பரிபூரண வளர்ச்சிக்குத் தமிழ் மொழி சக்திவாய்ந்த ஒரு கருவியாக இருக்கின்றதா?

இல்லை; தமிழ் மொழி இப்போது சக்தி வாய்ந்த கருவியாக இல்லை - பழம் பெருமை என்ற போதையில் மயங்க மறுப்பவர்கள், உண்மை நிலையை ஒப்புக்கொள்ள வெட்கப்படாதவர்கள் இப்படித்தான் கூறுகின்றார்கள்.

மொழி வெறிக்கோ, பழம்பெருமைப் போதைக்கோ ஆளாகாமல் நடு நிலைமையில் நின்று சிந்தித்துப் பார்த்தால், நாமும் இவ்வுண்மையை ஏற்றுக்கொள்வோம்.

புத்தம் புதிய கலைகள் மெத்த வளர்கின்ற காலம் இது. நுட்பமும் திட்பமும் நூதனமும் நிறைந்த பொருட்கள் நூறுயிரம் தோன்றும் காலம் இது. தமிழ்நாடு உலகோடு சமமாக நின்று பேரும் பெற்றுப் புகழும் பெற்றுப் பெருவாழ்வும் பெறவேண்டுமானல் இந்தக் கலை நுட்பங்கள் எல்லாம் தமிழிற் பெயர்க்கப் பட வேண்டும்.

இதை என்றே சொல்லிவிட்டான் பாரதி.
இன்றாவது செயற்படுவோமா நாம்?

இலக்கணக் கொத்தர்களும் இலக்கியப் புலவர்களும் புதுக் கலை விற்பன்னர்களும் பொது நலம் விரும்பிகளும் ஒன்று சேர வேண்டும். பழந்தமிழ் நூல்களை ஆழ்ந்து ஆராய்ந்து, அவற்றின் துணையுடன் புதுக்கலை நுட்பங்களைப் பொதிந்து 'தமிழ்' செய்ய வேண்டும்.

இவர்கள் தமிழை வளம்படுத்தினுல், தமிழ், தமிழனை வளம் படுத்தும்.

## அன்பார்ந்த நேயர்களே!

**வ**ணக்கம். நீண்ட நாட்களின் பின் வெளியான "கலைச்செல்வி" யை வாழ்த்தியும் வரவேற்றும் நீங்கள் எழுதிய கடிதங்களுக்கு நன்றியைத் தெரிவிக்கின்றோம். இனியாவது "கலைச்செல்வி" ஒழுங்காக வெளிவருமா? என்ற சந்தேகத்தைச் சிலர் எழுப்பியிருக்கின்றீர்கள். "கலைச்செல்வி" உங்கள் பத்திரிகை அதை வாழ வைப்பதும் வளர வைப்பதும் நீங்களே. இவ்வாண்டு தொடக்கம் ஆண்டுச் சந்தாவை மூன்று ரூபாயாகக் குறைத்துள்ளோம் "கலைச்செல்வி"யின் இலக்கிய சேவையை மதிக்கும் ஒவ்வொருவரும், தொடர்ந்து வெளியாகவேண்டும் என விரும்பும் ஒவ்வொருவரும் ஆண்டுச் சந்தாவை உடனே அனுப்பி உதவுவீர்கள் என நம்புகின்றோம் 'பின்னை என்பதும் பிறகு என்பதும் இல்லை என்பதற்கு அடையாளம்" என்றொருகூற்றுண்டு. ஆகவே, சந்தாப்பணம் அனுப்புவதைப் பின்போடாமல், இந்த இதழ் கிடைத்தவுடனேயே அனுப்பிவிடுக.

புதிய எழுத்தாளர்களுக்கு மட்டும் "கலைச்செல்வி" இடம் கொடுத்து வருவது ஒரு குறையென்றே தோன்றுகின்றது என்ற பொருள் படக் கண்டியிலிருந்து ஒரு வாசகர் எழுதியிருக்கின்றார். "கலைச்செல்வி" ஊக்குவித்த புதியவர் பலர் இன்று பிரபல எழுத்தாளர்களாக விளங்கவில்லையா? புதியவர், பழையவர் என்ற பேதத்தினால் மட்டும் இலக்கியம் வளர்ந்துவிடாது. பல்வேறு காரணங்களால், பழைய எழுத்தாளர் பலர் இப்போது எந்தப் பத்திரிகையிலுமே எழுதுவதில்லை. அவர்களை மீண்டும் எழுதவைக்க நாம் செய்த முயற்சி ஓரளவுக்கு வெற்றியளித்துள்ளது. அடுத்த இதழ் தொடக்கம் அவர்களின் படைப்புகளையும் உங்களுக்கு அளிப்போம். "நம் நாட்டு வாசகர்கள்" என்ற புதிய பகுதி அடுத்த இதழில் ஆரம்பமாகின்றது.

—ஆசிரியர்

## திருக்குறள் கீர்த்தனை - 18

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.

இராகம்: பந்துவராளி. தாளம்: ஆதி.

**பல்லவி**

நித்திய பூசைகள் ஏது - தெய்வ
பத்தியினால் அடியார் பாரினில் புரிந்திடும்

**அனுபல்லவி**

இத்திரு பூமியில் இல்லாது வான்மழை
வற்றி வறக்குமேல் வானோர்க்குச் செய்யும்

**சரணம்**

தேவர் மகிழ இந்தப் பூவுலகந்தனிலே
ஆவல் மிகுந்து மாந்தர் ஆற்றும் சிறந்த பூசை
ஞாலம் தனிலே ஏது? ஞானம் இருந்த போதும்
வானம் வரண்டு மாரி வழங்காதிருக்குமாயின்.

யாழ்ப்பாணம் ந. வீரமணி

# பேரும் பரிசும்

## 1ம் பரிசு: ரூபா 10-00

## 2ம் பரிசு: ரூபா 5-00

உங்களுடைய வாழ்க்கையில் எத்தனையோ அருமையான கவிதைகளைப் படித்துச் சுவைத்திருப்பீர்கள். சொற்பொழிவாளர்கள், பல கவிதைகளை மேற்கோளாக எடுத்துக் காட்டுவதை அவதானித்திருப்பீர்கள். செய்யுள்கள் சிலவற்றின் அடிகளை இங்கே தருகின்றோம். அவற்றை ஆக்கிய கவிஞர்களின் பெயர்களை உங்களாற் கூறமுடியுமா?

1. பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்.
2. தனியொருவனுக் குணவில்லையெனிற் சகத்தினை அழித்திடுவோம்
3. யாதும் ஊரே யாவருங் கேளிர்.
4. கல்லு வைத்த கோவிலெல்லாம் கைகுவித்து நோன்பிருந்து செல்வக்குமாா சிறப்புடனே பெற்றெடுத்தேன்.
5. அடுத்து முயன்றாலும் ஆகுநாளன்றி எடுத்த கருமங்கள் ஆகா.

உங்கள் விடைகளை மையினால், தெளிவாக எழுதி 20-4-65க்கு முன் கீழேயுள்ள முகவரிக்கு அனுப்புக. எல்லாம் சரியான விடை அனுப்பியவருக்குப் பத்து ரூபாவும், ஒரு பிழையுடன் அனுப்பியவருக்கு ஐந்து ரூபாவும் பரிசாகக் கொடுக்கப்படும். பலர் சரியான விடைகளை அனுப்பியிருந்தால், திருவுளச் சீட்டு மூலம் தெரிவு செய்யப்படும் முதலாவது அன்பருக்கு முதற் பரிசும், அடுத்தவருக்கு இரண்டாம் பரிசும் வழங்கப்படும்.

முக்கிய கவனிப்பு: சரியான விடைகள் அனுப்பியோரின் பெயர்கள் முழுவதும் "கலைச்செல்வி" யில் வெளியிடப்படுவதுடன் "கலைச்செல்வி" வைகாசி இதழும் அவர்களுக்கு இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

உங்கள் பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி:

**கலைச்செல்வி**

மே/பா கலாதேவி அச்சகம்,
புகையிரத நிலைய வீதி,
**சுன்னாகம்.**




விமர்சனம், சிறுகதை, கட்டுரை, நாடகம் நாவல் முதலிய இலக்கியத் துறைகளில் குறிப்பிடத்தக்க வெற்றியீட்டியுள்ள இரசிகமணி கனக. செந்திநாதன் அவர்களை இலக்கிய இரசிகர்கள் நன்கறிவர். யாழ்ப்பாடி, வேல், உபகுப்தன், க. செ, கரவைக்கவிகந்தப்பனார் முதலிய பல பெயர்களில் அவர் தன் கைவண்ணத்தைக் காட்டி வருகின்றார். அவருடைய உண்மைப் பெயர் கனக செந்திதான் அன்று என்பது உங்களுக்குத் தெரியுமா? பலருக்கு இது ஆச்சரியமாக இருக்கக்கூடும். அந்த அளவிற்குக் கனக செந்திநாதன் என்ற பெயர் பிரபலமாகிவிட்டது. ஆனால் அவருடைய உண்மைப் பெயர் திருச்செவ்வேல் என்பதுதான்!

நமது பூமி, முதன் முதலிற் சூரியனிலிருந்து வெடித்து ஒளிப்பிழம்பாகப் பல ஆண்டுகள் இருந்து, காலப் போக்கில் குளிர்ச்சி பெற்று இப்போது இந்த நிலையிலிருக்கின்றது என்று நாம் நம்பிக்கொண்டிருக்கிறோமல்லவா? பூமியின் தோற்றம் பற்றிய இக்கொள்கை தவறு என்று கூறுகின்றார் அமெரிக்காவைச் சேர்ந்த மண்ணியல் நிபுணரான கலாநிதி ரொபேட் டயஸ் என்பவர். சூரியனைச் சுற்றியிருந்த தூசிப் படலங்களின் திரட்சியிலிருந்தே பூமி தோன்றிய தென்றும் அவர் கூறுகின்றார். 4,500,000 ஆண்டுகளின் முன்னால் பூமி உருவானதென அவர் குறிப்பிடுகின்றார்.

காலஞ்சென்ற வின்ஸ்டன் சேர்ச்சில் ஒரு தடவை ஜனாதிபதி ரூஸ்வெல்டின் விருந்தாளியாக ''வெள்ளை மாளிகை''யில் தங்கியிருந்தார். சேர்ச்சில் எப்போதும் பிறந்த மேனியாகவே படுப்பது வழக்கம். ஒரு நாள் விடியற்காலையில் சேர்ச்சில் படுத்திருந்த அறைக்குள் நுழைந்தார் ஜனாதிபதி. சேர்ச்சிலின் நிலையைக் கண்டதும் அதிர்ச்சியடைந்து பின் வாங்கினார். அதைக்கண்ட சேர்ச்சில் புன்சிரிப்புடன் ''மறைவாக வைத்திருப்பதற்கு இங்கிலாந்திடம் ஒன்றுமேயில்லை நீங்கள் உள்ளே வாருங்கள்'' என்றார் அமைதியாக!

கென்னடி மாஸ்கோவிற்கு விஜயஞ் செய்தபோது குருஷ்சேவும் அவரும் 'கோல்ப்' ஆடினார்கள். கென்னடியே வெற்றி பெற்றார். அதை ருஷ்யப் பத்திரிகைகள் இப்படி வெளியிட்டன: நமது பிரதமர் குருஷ்சேவும் அமெரிக்க ஜனாதிபதி கென்னடியும் 'கோல்ப்' ஆடினார்கள். அதில் நம் பிரதமர் இரண்டாவதாக விளங்கினார். மிஸ்டர் கென்னடி, கடைசிக்கு முன்னவராக இருந்தார்!

எழுதுவதெல்லாம் 'அச்சில் ஏறி

விடும்' என்ற தைரியத்தில் எழுதாமல், 'அச்சில் ஏறிவிடுமே' என்ற அச்சத்துடன் எழுதவேண்டும்.

—பரணீதரன்

∴

அமெரிக்காவில் ஒரு கடைக்காரர், "மேல் உடம்பை மறைக்காத நீச்சல் உடை அணிந்து முதலில் எங்கள் கடையில் வியாபாரம் செய்ய வரும் பெண்ணுக்கு அவள் கேட்கும் பொருளை இலவசமாக அளிப்போம்" என்று விளம்பரம் செய்தார்.

என்ன ஆச்சரியம்! ஒரு பெண் உண்மையிலேயே அரை நிர்வாணமாக வந்துவிட்டாள் நீச்சல் உடையில்! கதறைன் ஜோன்ஸ் என்ற அந்தப் பெண் கேட்டவற்றையெல்லாம் கடைக்காரர் இலவசமாக வழங்கினார்.

அப்படிப் பரிசுப் பொருட்களைத் தட்டிச் சென்ற அப்பெண்ணின் வயதென்ன தெரியுமா? மூன்று!

∴

சண்முகநாதன் என்ற பெயரில் ஈழத்து இலக்கிய உலகில் எட்டு எழுத்தாளர்கள் இருக்கின்றனர். செ. சண்முகநாதன் (சாரு) ந. சண்முகநாதன் (யாழ்வாணன்) பொ. சண்முகநாதன், பெரி. சண்முகநாதன், தா. சண்முகநாதன் (முனியப்பதாசன்) தா. சண்முகநாதன் (கிணறுகாவி) மு. சண்முகநாதன் (ஆனைமுகன்) எஸ். சண்முகநாதன், ஆகியோரே அவ்வெண்மரும்!

∴

அடுத்த இதழில்:
**'தூயான தங்கைக்கு'**

சராசரி 60 வயதுள்ள ஒரு மனிதன் தன் வாழ்நாளில் ஆறு வருட காலத்தைச் சாப்பிடுவதில் செலவிடுகின்றான். ஐந்து ஆண்டு காலத்தை நடப்பதிலும் நான்கு ஆண்டுகளைப் பேசிக்கொண்டிருப்பதிலும், எட்டு ஆண்டுகளைப் பொழுதுபோக்கு அம்சங்களில்ஈடுபடுவதிலும்,ஓராண்டை டெலிபோனில் பேசுவதிலும்,மூன்று ஆண்டுகளை வியாதியிலும் செலவிடுகின்றான். கண்ணாடியைப் பார்த்துக் கொண்டிருப்பதில் எழுபது நாட்களும், மூக்கைச் சிந்துவதில் பத்து நாட்களும் கழிகின்றன!

∴

ஜனாதிபதி ஐசன்ஹோவர் ஒரு விசேட கூட்டத்திலே கலந்துகொண்டார் நீண்ட நேரமாகக் கூட்டம் நடந்துகொண்டிருந்தது. ஒன்பது பேர்கள் பேசிவிட்டார்கள். அப்போதுதான் கூட்டத்தலைவர் ஐஸன்ஹோவரை மக்களுக்கு அறிமுகப்படுத்தினார்.

ஐஸன்ஹோவர் எழுந்தார், "தோழர்களே, ஆங்கிலத்திலே எதைச் சொன்னாலும் முற்றுப்புள்ளிகள் (புல்ஸ்டாப்) உண்டு இந்தச் சமயத்தில் நானே அந்த முற்றுப் புள்ளி" என்று கூறிவிட்டு உட்கார்ந்தார், அன்றைய தினம் அவர் கையைக் குலுக்கிப் பாராட்டாதவரே கிடையாது!

ஓர் நற்செய்தி!

# யானை ஸ்பெஷல் பீடி

# SPECIAL ELEPHANT BEEDI

குணம் நிறைந்ததும் சுறுசுறுப்பைக் கொடுப்பதும்

## யானை ஸ்பெஷல் பீடிகளே!

தெரிவு செய்யப்பட்ட புகையிலையினால் தேர்ந்தெடுக்கப்பட்ட
தொழிலாளர்களைக் கொண்டு செய்யப்படுவது

## யானை ஸ்பெஷல் பீடிகளே!

உள்நாட்டுக் கைத்தொழிலை ஊக்குவிப்பதும்
உங்களுக்கு நன்மை தருவதும்

யானை பீடி ஸ்பெஷல் பீடிகளே

# யானை பீடிக் கம்பெனி

கொழும்பு-12

நினைவுமலர்கள் வெளியிடுவோரே!
பாடசாலை அதிபர்களே!
புத்தக ஆசிரியர்களே!
பத்திரிகை நிர்வாகிகளே!

குறைந்த செலவில்

## சிறந்த 'புளக்'குகள்

செய்ய வேண்டுமானால்
எங்களுக்கு எழுதுங்கள்,

# Sri Lanka Block Makers

131, MESSENGER STREET - COLOMBO

# மணி மாலை

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிற் பதினெட்டு ஆண்டுகள் தமிழ்ப்பணி ஆற்றியவரும், ஈழத்து எழுத்தாளர்களின் முன்னோடிகளுள் ஒருவரும் பிரபல விமரிசகருமாகிய செந்தமிழ்மணி பொன். கிருஷ்ண பிள்ளை அவர்களின் சேவை நலம் பாராட்டு விழாவில், அவருக்குச் சூட் டப்பட்ட பாமாலைகளிலிருந்து சில மலர்களை இங்கே தருகின்றோம்.

ஆண்டுகளா றைந்தின்முன் றமிழ கத்து
ஆனந்த விகடனில் நீர் பரிசைப் பெற்றும்
மாண்புறு நல் சென்னை எழுத் தாளர் சங்கம்
மதிப்புடனே ஈந்த வெள்ளிப் பதக்கங் கொண்டும்
சான்றோர்கள் சேர் இடமாம் விவேகானந்தச்
சபைதனிலே சொற்பொழிவில் முதலாய் வந்தும்
ஈண்டுள்ள அறிஞர்களும் மெச்ச நீரே
ஈழத்தார் பெருமை கொள வைத்தீர் ஐயா.

—இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம்.

உச்சிதொட்டுள்ளங் கால்வரை யினிக்கு மொருதனிப் பண்டிதனென்றும்
மெச்சு கற்கண்டுப் பண்டிதனென்றும் விரிதமிழ்ப் பண்டித மணியார்
பச்சை மென்றமிழாற் பகர்ந்த பாராட்டுப் பரித்தனை யினித்த பண்டித நீ!
இச்சபை நல்குஞ் செந்தமிழ் மணியாம் இனிய நல் விருதுமேற் றருளே

—பலாலி ஆசிரியர் கழகப் பழைய மாணவர்

சண்முக ரத்தினச் சஞ்சீவி பர்வதங்
கண்ணுங் கருத்துமாய்க் காத்த ரத்தினம்
தவறியும் பொய்யுரை சாற்று வதிபர்
சவரிமுத் தணிந்திடு தங்கப் பதக்கம்
கந்த சாமிக் கருணை யதிபர்
சிந்தைத் தடத்தலர் திவ்ய நறுமலர்
என்ன உலகெலா மேத்தி மகிழ்ந்திடு
பொன் கிருஷ்ண பிள்ளைப் பண்டித பூபதி.

—பலாலி ஆசிரியர் கழக இப்போதைய மாணவர்.

நவரசம் ததும்பும் நகைச் சுவைக் கதைகள்
கவர்தரப் புனைந்துயிர்க் கருத்தொடு கூறீஇ
வகுப்பறை யெங்கணும் சிரிப்பொலி பெருக்கித்
தொகுப்புரை பகரும் திறனது பெரிதென
எழுத்தினும் பேச்சினும் உயரிடம் வகிக்கும்
பழுத்த நின் ஞானம் பகிர்ந்திட லரிதே!

—எஸ். எஸ். வைரமுத்து தம்பதிகள்.

# வாழ்த்துக்கள்!

ஜனநாயக சக்திகளை ஒன்றுதிரட்டி வெற்றியீட்டி நாட்டின் பிரதமரான டட்லி சேனநாயக்கா அவர்களை-

நான்கு அம்சகொள்கைகளை முன்வைத்துப் போராடித் தமிழ் மக்களின் ஒற்றுமையின் சின்னமாக விளங்கும் தமிழரசுத் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களை-


மீண்டும் அரசியலிற் புகுந்து: தமிழர்களின் இன்னல் நீக்கப்பாடுபடும் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களை-

நல்லதொரு அரசாங்கம் அமைக்க வழிவகுத்த பெருமக்களை வரவேற்கின்றோம்!

வாழ்த்துகின்றோம்! வணங்குகின்றோம்!

---

## "கலைச்செல்வி" வெளியீட்டு விழா



புதிய நிர்வாகத்தின் கீழ் வந்துள்ள "கலைச்செல்வி" யின் வெளியீட்டு விழா சென்ற 22-2-65 திங்கட் கிழமை சுன்னாகம் கலாதேவி அச்சகத்தில் சிறப்பாக நடைபெற்றது. பல எழுத்தாளர்களும் வாசகர்களும் விழாவிற்கு வந்திருந்தனர். இலங்கைப் பொருட் களஞ்சியத்தின் உரிமையாளர் திரு. த. சிவலிங்கம் அவர்கள் முதலாவது பிரதியை வாங்கி விற்பனையை ஆரம்பித்து வைத்தார்.

சாமிநாதரால் வேணியை விரும்பமுடியவில்லை; திலகாவைக் காதலிக்காமல் இருக்க முடியவில்லை. வேணியும் திலகாவும் சென்றபின் அவரால் என்ன செய்ய முடிந்தது?

# பிரமை

— இரா. இளஞ்செழியன்

"சாமிநாதா"

உதயகாலப் பூஜையை முடித்துக் கொண்டு கோவில் கதவுகளை இழுத்துப் பூட்டியவாறு குரல் கொடுத்தார் கணபதி ஐயர். எண்ணெயில்லாத கதவுகளின் பிணைச்சல்கள் கிறீச்சிட்டன.

"மாமா"

"போகலாமா?" சாவிக்கொத்தை இடுப்பில் செருகிக்கொண்டார்." கணபதி ஐயர்.

"சரி!"

வீதியில் இறங்கி மேற்கு நோக்கி அடி பெயர்க்கத் தொடங்கினர்கள் இருவரும். கிழக்கு வெளியில் துளிர்க்கும் ஒளிக்கீற்றுக்கள் இலேசாகத் தெரிந்தன குளிர்ந்தகாற்று உடலை வருடிச் சென்றது. இதழ் விரிக்க ஆரம்பித்திருந்த நந்தியாவட்டமலர்ச் சிமிழினின்றும் தெறித்த மணம் மூக்கை நிறைத்தது. கேணியை அடுத்து வயல் வரம்போடு ஒட்டிநின்ற ஒற்றைப் பனையின் ஓலைகள் சரசரத்தன. தொலைவில் சேவல் ஒன்றின் கூவல். அதற்குத் தாளமிடுகிருற்போன்று நீரினுள் தவளைகள் தாவுவதனல் எழும் 'லபக் லபக்'கென்ற ஒலி.

"பின்னேரம் அபிஷேகத்திற்கு நெல்லியிலை வேணும். பொழுது விடிந்ததும் சிருப்பர் வீட்டிற்குப் போய் ஒடித்துக் கொண்டு வந்து விடு"

"சரி" – சாமிநாதரின் உள்ளத்தில் இனந்தெரியாத பூரிப்பு.

கணபதி ஐயர் இன்னும் என்னென்னவோ சொல்லிக் கொண்டு போனர். அனைத்திற்கும் சாமிநாதரின் பதில் 'ம்' தான். அவர் சிந்தனைகள் சிருப்பர் வீட்டைச் சூழ்ந்து நின்றன. இரண்டு நாட்களுக்கு முன்னர் கண்ட காட்சி, ஊஞ்சலில் ஆடிக்கொண்டிருந்த திலகாவின் உருவம் இன்னமும் அவர் நினைவை விட்டுக்கலையவில்லை. எப்படிக் கலைய முடியும், அவரே அதைத் தன் இதயத்திரையில் பதித்துவிட்டபோது?

மணிகள் குலுங்கிறுற் போன்று "கலீர்" என்ற சிரிப்பொலி அவர் காதுகளில் விழுந்தாற்போல் இருந்தது. உடலில் சிலிர்ப்பு ஓடிற்று பிரமையா ?

"வேணி!" கதவைத் தட்டினர் கணபதி ஐயர். கனிவில் தோய்ந்தெழுந்தது அவர் குரல்.

"அப்பா!" கதவைத் திறந்துவிட்ட வேணி நடு அறையில், மங்கலான ஒளிவீசிக் கொண்டிருந்த லாந்தர் விளக்கைத் தூண்டி விட்டாள்.

வெளித் திண்ணையில் அமர்ந்து கொண்டார் சாமிநாதர். இதயம் இன்னமும் தெளிவாகவில்லை; திலகா என்ற பிரமையின் ஆழத்தில்

அமிழ்ந்திருந்தது. ஊஞ்சலில் இருந்து ஆடியவள் அவர் உள்ளத்தையும் தொட்டு ஆட்டிவிட்டாளோ?

விடிகாலைப் பொழுதின் இளங் காற்று உடலை வருடிச் சென்றது. திண்ணையில் சாய்ந்தவாறு கண்களை மூடிக்கொண்டார் சாமிநாதர்.

பொழுது நன்ருக விடிந்து விட்டது. காலை வெய்யில் சுளீரென்று அவர் பால் மேனியில் பட்டுத் தெறித்தது. வயல் வரம்பின் வழியே சங்குவேலியை நோக்கித் துரிதமாக நடந்தார் சாமிநாதர். வேட்டியை முழங்கால்வரை மடித்துக் கட்டியிருந்தார். வாழைப் பூப்போன்று அழகாக முடிந்திருந்த கருங்குடுமி அவரது சிவந்த மேனிக்கு எடுப்பாக இருந்தது. நெற்றியில் முத்துமுத்தாய் வழியும் வியர்வைத் துளி. தோள்ப் பட்டையிலிருந்து இடைவரை சரிந்து தொங்கும் பழுப்பேறிய பூணூல்.

காற்றின் அசைவில் 'கலகல'த்த சணல்கள் சரிந்து வளைந்து அவர் கால்களைத் தழுவ முயன்றன. அவற்றைக் கால்களால் விலக்கி விட்டபடி நடந்தார். வெள்ள வாய்க்காலைத் தாண்டி ஒழுங்கையினூடாகத் தெருவில் ஏறி நடந்தார். சிருப்பர் வீட்டருகே நடை தடைபட்டது.

"வாரும் ஐயா!" சிருப்பர் எதிரில் வந்தார்.

"கோவிலில் ஒரு அபிஷேகம்; நெல்லியிலை கொஞ்சம் வேணும்?"

"சரி ஒடித்துக் கொண்டுபோம்"

நெல்லியிலையோடு தோட்டத்தில் இருந்து வந்தார் சாமிநாதர் பார்வை வேப்பமரத்தருகே சென்றது. ஊஞ்சல் தனிமையில் அசைந்தது. திலகாவை அங்கு காணவில்லை. வீட்டைத் தாண்டி வரும்பொழுது சாமிநாதரின் கண்கள் உள்ளேசென்றன. சிமெண்ட் திண்ணையருகே நடை தயங்கியது. அவரது விழிக்கரங்களின் ஒளிவீச்சில் ஹாலில் இருந்த திலகாவின் உருவம் தென்பட்டது. சாய்வு நாற்காலி ஒன்றில் ஒயிலாகச் சாய்ந்தவாறு புத்தகம் ஒன்றை வாசித்துக்கொண்டிருந்தாள் அவள். கருநாகங்கள் போன்று நீளமான பின்னல்கள் இரண்டும் தரையைத் தொட்டு நின்றன. காதோரத்தில் சுருண்டிருந்த மயிர்க்கற்றைகள் சிவந்தகன்னத்தின் எழிலைப் பெரிது படுத்தின. செம்பருத்தம் பூச்சாற்றை எடுத்துக் கைதேர்ந்த ஓவியன் ஒருவன் அழகாகத் தீட்டிய தாமரை மொட்டைப் போன்று ஒன்றிக் கிடக்கும் உதடுகள்; இருளின் கருமையினைச் சுரண்டியெடுத்துப் பனித் துளியில் குழைத்து வைத்த பொட்டுக்களாய் ஒளிரும் விழிகள். புத்தகத்தை ஆழ்ந்து படிப்பதனல் ஏற்பட்ட உணர்ச்சிப்பெருக்கு அவள் கன்னங்களில் தெரிந்தது.

உடலையசைக்காது உள்ளத்தை மட்டும் ஓடவிட்ட நிலையில் நின்ருர் சாமிநாதர். வாலிபப் பருவத்தில் எழும் கனவுகளின் பூரிப்புக்கு அடிமையாகி.........

"என்ன ஐயா நெல்லியிலை போதுமா?"

திடுக்கிட்டுத் திரும்பினர் சாமிநாதர். எதிரே சிருப்பர் நின்றிருந்தார்.

"ஓ...! இவ்வளவு போ...... பேரதும," வார்த்தைகள் தாளமிட்டன. "உங்களிடம் சொல்லிவிட்டுப் போவதற்காக நின்றேன. வருகிறேன்."

அமர்ந்த பின்னரும் அவரது நினைவுகள் திலகாவைச் சுற்றியே வியூகம் அமைத்து நின்றன. வெளி வாசல் அருகே நிழல் கவிந்தது.

''அத்தான்''

நிமிர்ந்து பார்த்தார் சாமிநாதர். வேணி கையில் மோர்ச் செம்புடன் நின்றிருந்தாள். குளித்து உலராத கூந்தல். காதோரக் குழற் கற்றையில் நீர் முத்துக்கள் பளிச்சிட்டன. நெற்றியில் குங்குமம் துலங்கியது. ஒளிதவழும் கருவிழிகள். மறுவற்ற முகம். மண்பானையில் காய்ச்சினாலும் பால் நிறைவோடு பொங்குவது போல், எளிமைக் கோலத்திலும் அழகு அவளிடத்தில் நிறைவோடு இலங்கியது.

மௌனமாகத் தலையைக் குனிந்து கொண்டார் சாமிநாதர். அவள் விழிகளில் நிறைந்திருந்த ஆவலை — அந்த ஆவலின் காரணமாக நெஞ்சில் பரிணமித்த வேதனைப் பெருமூச்சுக்களை அவர் உணரவில்லை. உணர முடியாத பிரமையில் அல்லவா ஆழ்ந்திருக்கிறார்!

செம்பை அவர் அருகே வைத்துவிடடுப் பேசாது உள்ளே சென்றாள் வேணி செம்பை எடுத்து மடமட என்று மோரைப் பருகினார். கனன்றுகொண்டிருந்த இதயத்தில் குளிர் காற்று வீசியதைப் போன்ற உணர்வு. உடலெல்லாம் ஒரு முறை வியர்த்து வழிந்தது. துண்டால் துடைத்து விட்ட படி திண்ணையை விட்டு இறங்கி நடந்தார். கோயிலுக்கு எதிரே கேணியை அடுத்திருந்த மடத்தில் கால்களை நீட்டிப் படுத்துக்கொண்டார். கேணியில் மீன்கள் துள்ளி விழுந்து எழுப்பும் ''களீர்'' என்றஒலியில் என்றுநழுவும் காற்று. அதன் தழுவலில் கலகலக்கும் வில்வமரம். சாமிநாதரின் கண்கள் சுழன்றன. இமைகளை மூடிக்கொண்டார்.

அன்று சிருப்பர் வீட்டில் திவசம். கணபதி ஐயருக்கு மாவிட்டபுரத்தில் அவசரவேலை. அவர் அங்கு போய்விட்டார். சாமிநாதர் தர்ப்பையுடன் சங்குவேலிக்குப் புறப்பட்டார். வயல் வரம்பின் வழியே நடக்கையில் இதயம் வரம்பற்ற உவகையில் ஆழ்ந்திருந்தது.

வயலில், மஞ்சள் மஞ்சளாய்ப் பூத்துக் குலுங்கிய பூரிப்பில் கலகலத்து நிற்கும் சணல்களெல்லாம் வெட்டப்பட்டு விட்டன. பொட்டல் வெளியாகக் காட்சியளிக்கிறது வயற்காடு. கண்ணுக்கெட்டிய தூரம்வரை வரம்புக் கட்டுகளே தெரிந்தன.

கால்களை வேகமாகப் போட்டார் சாமிநாதர்.

''வாரும் ஐயா!'' சிருப்பர் வரவேற்றார்.

நடு மண்டபத்தில் நிறைகுடம் வைக்கப்பட்டிருந்தது. அருகே குத்துவிளக்கு எரிந்தது. அதன் ஐந்து முனைகளையும் தொட்டு நிற்கும் ஒளிமொட்டுக்கள்; அவை திலகாவின் விழிச்சுடர்களா! ஒரு கணம் பிரமித்து நின்றவர் மறுகணம் தன்னைச் சமாளித்துக்கொண்டு மான்தோலில் அமர்ந்தார். உதடுகளை மந்திரங்கள் தழுவி நின்றன. கைகள் யந்திர கதியில் காரியங்களில் ஈடுபட்டன. விழிகள் கட்டுக்குள் அடங்கியிருந்தன. மனம் கட்டவிழ்ந்து ஓடியது. தாழ்ந்திருந்த சுவாமிநாதரின் விழிகளுக்கெதிரே நீலமேகம் ஒன்று அசைந்து வந்தாற்போன்ற உணர்வு. இதயத்தில் கெந்தி எழுந்த ஆவல்

அவரை உந்தித் தள்ளியது. பார்வையை நிமிர்த்தினார். நீலச் சேலையும் மஞ்சள் சோழியும் தங்கநிற மேனிக்கு மெருகூட்ட நின்றிருந்தாள் திலகா. சிவந்த நெற்றியில் பளிச்சிட்ட குங்குமம். கற்பூரச் சுடர்களென ஒளிரும் விழிகள். அச்சுடர் விழிகளின் ஒளிப்புனலில் தன்னையிழந்து தவிப்பது போன்ற இன்ப வேதனை. சிட்டாக மாறி வானில் உயர, உயரப் பறப்பது போன்று உடலெங்கும் உணர்வுகளின் கோலம். இனிக்கும் உணர்வுகளும், இன்ப வேதனைகளும் கணப்பொழுதில்தான். மறுகணம் திலகா உள்ளே போய் விட்டாள்.

சிறிது நேரத்தில் பையும் அரிசியும் காய்கறிகளுமாக வெளியே வந்தார். சாமிநாதர். வெய்யில் கொளுத்தியது. எதையோ பிரிந்து வருகிறாற் போன்று இதயம் விம்மியது. வீட்டுக்கு வந்து திண்ணையில் அமர்ந்தார். வியர்வை அருவியாக வழிந்தது, முகத்தைத் துண்டால் ஒற்றினார். பூணூலை விலக்கி நெஞ்சையும் முதுகையும் துடைத்துவிட்டுச் சுவரில் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டார். அரிசிப் பையை வேணி வந்து எடுத்துச் செல்வது வளையல் ஓசையினின்றும் புலனாகியது. அவர் விழிகளைத் திறக்கவே இல்லை. தூக்கமா? மூடிய இமைகளின் கருத்திரையில் திலகாவின் உருவத்தைக் கண்டுவக்கும் ஒருவகைத் துயில்.

கணங்கள் பிணைந்து நிமிடங்கள் உருவாகி அழிந்தன.

'அத்தான்!"

இமைகளை இலேசாக மலர்த்தி வேணியை நோக்கினார் சாமிநாதர்.

"சாப்பிட வாருங்கள் அத்தான்!"

'மாமா வரட்டும் சாப்பிடுகிறேன்".

"அப்பா வர நேரமாகும்; நீங்கள் வந்து சாப்பிடுங்கள்".

"இப்போ பசியில்லை' பிறகு சாப்பிடுகிறேன்" எகிறிப் பாய்ந்தன சொற்கள். திண்ணையை விட்டிறங்கி வீதியில் விடுவிடென்று நடந்தார்.

கதவில் சாய்ந்த வண்ணம் நின்றாள் வேணி. கண்கள் பனித்து வழிந்தன. சாமிநாதருக்கு மட்டும்தானா இதயம் இருக்கிறது? அவருடைய இதயத்தில் மட்டுந்தானா ஆசைக் கனவுகள் பொங்குகின்றன அவளுக்கு இல்லையா?

வெயில் மெல்ல மெல்ல இறங்கி வந்தது. மேற்கு வெளியில் சந்தன ஓடை வழிந்தது, இடையிடையே கொட்டிக் கிடக்கும் குங்குமம். மாலை வானையும் பரந்த வயற்காட்டையும் பிரித்து வானையே தொட்டுவிட்டாற் போல் வரிசையாக அடர்ந்து நிற்கும் இருண்ட பனைக் கூட்டம். அதற்குமேல் கூட்டம் கூட்டமாய்ப் பறக்கும் பறவைகள், கேணியின் ஒரு கரையில் நின்ற ஒற்றைப்பனைமரத்தின் மெலிய நிழல் நீண்டு வந்து மறு கரையைத் தொட்டது.

இயற்கை அள்ளித் தெளித்த இனியகாட்சிகள் எல்லாம் சாமிநாதருக்கு அலுத்துவிட்டன. அவருக்கு அலுக்காத காட்சி எது? நீலப் புடைவை அசைந்துவர, நீள்விழிகளில் ஒளி மொட்டுக்களைக் கோத்து நிற்கும் திலகாவின் உருவம் ஒன்று மட்டுந்தானா?

துண்டை உதறித் தோளில் போட்டவாறு கேணிக்கரை மடத்தை விட்டெழுந்தார்.

வயிற்றின் தேவை அருவமான

உணர்வுக் கம்பிகள் மூலம் தெரிந்து விட்டனவா? வீட்டுப் படியில் கால் வைக்கும் பொழுதே உள்ளே பேச்சுக் குரல் எழுந்தது. மாமா மாவிட்ட புரத்திலிருந்து திரும்பிவிட்டாரோ? திண்ணையருகே நின்று அவதானித்தார்.

"நீ ஏனம்மா சாப்பிடவில்லை?";

"அத்தான் சாப்பிடவில்லை அவர் சாப்பிடாமல் நான் ... ......?" வேணி பேச்சைப் பாதியில் விழுங்கினாள்.

"சாமிநாதன் சாப்பிடவில்லையா ஏன்?"

"தெரியாது! அத்தான் முன்னர் போலில்லை..." வேணியின் குரல் கம்மியது.

வெளியே வந்த கணபதி ஐயர் சாமிநாதரை உற்றுப் பார்த்தார். பின் மௌனமாகச் சென்று அமர்ந்தார். கை கால்களைக் கழுவி விட்டுச் சாமிநாதரும் அருகே வந்து அமர்ந்தார்.

கார்த்திகை பிறந்து விட்டது வானில் கருநீலம் விரிந்து பொழியக் காத்திருந்தது. வயல்களில் பச்சைக் கம்பளம் ஒன்றை விரித்தாற்போன்று துல்லியமான காட்சி. காற்றின் அசைவில் அழுத்தம் தெரிகிறது.

அன்று பொழுது மலர்ந்து வெகு நேரமாகிவிட்டது. காய்கறிப்பையை மிதி கல்லருகே வைத்துவிட்டு கிணற்றின் நீரை அள்ளிக் காற்புழுதியைக் கழுவி முகத்தையும் அலம்பினார் சாமிநாதர்.

"ஐயா! சந்தைப் பக்கம் போனீரோ?"

நிமிர்ந்து பார்த்தார். சகடையருகே மணியகாரன் நின்றிருந்தார்

"காய்கறி விலை எப்படி?"

"விலை பரவாயில்லை".

"என்ன மெலிந்துபோய்விட்டீர்? என்ன கவலை உமக்கு?" திடீரென்று கேட்டார் மணியகாரன்,

"ஒன்றுமில்லையே!" தடுமாறினார் சாமிநாதர். உடல் குப்பென்று வியர்த்தது.

"அதைத்தானே கேட்டேன். தெய்வம்போல ஒரு மாமா இருக்கும் பொழுது உமக்கென்ன கவலை? கணபதி ஐயரைப்போல் ஒருவர் மாமாவாகக் கிடைப்பதற்கு நீர் தவஞ்செய்திருக்க வேணுமையா! உம்முடைய அம்மாவை உமக்கு ஞாபகமிருக்கிறதா?"

"ம்!"

"உமக்கு இரண்டு வயசிருக்கும். உம்முடைய அப்பா மூர்த்திஐயர் இந்தியாவுக்கு யாத்திரை போனபோது ...ம் ... போனவர் போனவர்தான். தவித்துநின்ற உம்முடைய அம்மாவுக்கும் உமக்கும் கணபதி ஐயர்தான் அடைக்கலம் கொடுத்துக் கூட்டிவந்தார். உம்முடைய எட்டாவது வயதில் அம்மாவும் போய்விட்டாள்."

பனித்த விழிகளைத் துடைத்து விட்டார் சாமிநாதர். உதடுவிம்மியது.

"ம்... எவ்வளவோ கஷ்டப்பட்டு அந்தத் தாயில்லாப்பெண் வேணியையும் உம்மையும் வளர்த்து விட்டார் கணபதி ஐயர். உமக்கு இப்போ என்ன வயதாகிறது"? கேட்டார் மணியகாரன்.

"இருபத்தி நாலு!"

"இனியென்ன வேணியின் கழுத்தில் ஒரு தாலியைக் கட்டிவிட்டீர் என்றால் கணபதி ஐயரின் கவலை விட்டது." மணியகாரன் நகர்ந்தார்.

ஒருகணம் அயர்ந்துபோய் நின்றார் சாமிநாதர். பிரளயம் மூண்டுவிட்

டாற்போல் இதயம் நடுங்கிற்று. குளம்பிய உள்ளத்துடன் தள்ளாடிய வாறு வீட்டைநோக்கி நடந்தார்.

மாலை வானின் நீலப் பெரு வெளியை நோக்கிக் கருமேகங்கள் ஊர்ந்துவந்தன. கேணிக்கட்டில் அமர்ந்திருந்தார் சாமிநாதர். இத யத்தின் குமைச்சல் இன்னமும் தீர்ந்தபாடில்லை. கரையில் வந்து மோதி மறையும் கடலலைபோல் எண் ணங்கள் ஒன்றின்பின் ஒன்ருக வந்து மோதின. மெல்லென வீசும் அழுத்த மான குளிர்காற்று. அதன் வீச்சில் கேணியின் மேற்பரப்பில் ஏற்படும் மடிப்புகள்; அவர் இதயத்தைப் பிரதி பலிக்கின்றனவா?

கல்லின்மேலிருந்த பச்சைத் தவளையொன்று 'குபுக்' கென நீரில் பாய்கிறது. காற்றின் அசைப்பில் சர சரக்கும ஒற்றைப்பனை; கலகலக்கும் வில்வமரம். அந்தக் கலகலப்பினூடே 'கலீர்' என்ற சிரிப்பொலி எழுந்தாற் போன்ற உணர்வு. சாமிநாதரின் உடலில் சிலிர்ப்பு ஓடியது.

திலகாவின் சிரிப்பொலி அல்லவா அது? அவளேதான். அவர் அருகே அல்லவா அமர்ந்திருக்கிருள்! எப் பொழுது வந்தாள்?

''திலகா!'' அவர் தன் கரங்களை நீட்டுகிருர். சிவந்த உதடுகளைப் பிளந்து வரும் முத்துப் பற்களின் ஒளி அவர் கண்களை இருட்டடிக் கின்றது.

''தாமரைப் பூ வேண்டும்'' என்று கேட்பதுபோன்று அவள் பார்வை கேணியின் மையத்தில் நிலைத்திருக் கின்றது. மறுகணம் 'தொடக' கென்று நீரில் குதித்துத் தாமரை மலர்களுடன் படிக்கட்டுகளில் ஏறி ஞர் சாமிநாதர்.

''அத்தான்''!

நிமிர்ந்து பார்த்தார். அங்கு வேணி நின்றிருந்தாள். திலகா இல்லையா? கண்களைத் துடைத்து விட்டு மீண்டும் பார்த்தார். அது வேணியேதான். திலகா எங்கே அவள் வரவில்லையா? அவர் கண் ணெதிரில் தோன்றியது மாயத் தோற்றமா!

''யாருக்கு அத்தான் இத்தனை பூக்களும்?'' வேணி ஆவலுடன் கேட் டாள். முகத்தில் மகிழ்வு ததும்பி நின்றது. விழிகளில் ஓர் புதிய ஒளி.

உனக்கேதான்! தாமரைப்பூ வென்ருல் உனக்குப் பிடிக்குமே!'' அவளது கரங்களில் மலர்களைத் திணித்துவிட்டு வெறி பிடித்தவர்போல் நடந்தார். ஈரவேட்டி 'சதக்' 'சதக்' என்று ஒலி எழுப்பியது.

திலகா வரவில்லை. அவர் கண்டது அத்தனையும் கனவு. உடல் நடுங்கி யது. கூதலா அன்றி காதல் கன வின் ஏக்கமா? ஊமைக்காயம் பட் டாற்போல் நெஞ்சு வலித்தது.

திண்ணையில் வந்தமர்ந்து தலை யைக் கரங்களால் தாங்கிக்கொள்கிருர்.

இருள் கவிந்து வந்தது. விளக் குகள் பளிச்சென்று ஒளி உமிழத் தொடங்கிவிட்டன.

''அத்தான்!'' வேணி மெல்ல அழைத்தாள்.

சாமிநாதர் உணர்வுவந்து, நிமிர் ந்து அவளைப் பார்த்தார்.

ஈர வேட்டியை இன்னமும் மாற்ற வில்லையே நீங்கள்?''

''அது எனக்குத் தெரியும்!"

சூடேறியிருந்தது சாமிநாதரின் பதில்.

அயர்ந்துபோய் நின்ருள் வேணி. மறுகணம் உள்ளத்திற் குருட்டுத் தைரியம் எழுந்தது.

''அத்தான் என்னைக் கண்டால் ஏன் விஷம்போல் வெறுக்கின்றீர்கள்?'' கலங்கிய குரலில் கேட்டாள்

''நான் உன்னை வெறுக்கவில்லை'' சலனமற்று எழுந்தது பதில்.

''விரும்புகிறீர்களா''

''அதுவுமில்லை''.

''அப்படியானல் விருப்பு வெறுப்பற்ற பரமசிவனு நீங்கள்?''.

''அபபடித்தான் வைத்துக்கொள்ளேன்!''.

வேணிக்கு அழுகை முட்டி வந்தது. தன் விசும்பலை அடக்கிக்கொண்டாள். ''அந்தப் பரமசிவன் கூட உமாதேவியார்மேல் அன்பாக இருக்கிருரே?''

''ஆனல்'' ஆவேசமாக எழுந்தார் சாமிநாதர் ''ஆனல் நிச்சயமாக நீ அந்த உமாதேவியாக இருக்க மாட்டாய்''. தீயாக எழுந்த சொற்கள் அவள் இதயத்தைப் பொசுக்கின.

''அத்தான்!'' இதயத்தின் ஆவல் ஒலிவடிவாய் வெளியேறியது. விழிகளை நீர் திரையிட்டு மறைத்தது. அதைத் துடைத்துவிட்டுப் பார்த்தாள் வேணி. திண்ணையருகே சாமிநாதரைக் காணவில்லை. கோவிலின் தெற்குவீதி வாசலருகே அவர் தள்ளாடியவாறு செல்வது நிலவொளியில் மங்கலாகத் தெரிந்தது. திரும்பிய வேணி வாசலருகே கணபதிஐயர் நிற்பதைக்கண்டதும் ''அப்பா'' என்று விம்மிய வண்ணம் அவர் மார்பில் முகத்தைப் புதைத்தாள். கணபதி ஐயரின் விழிக் கிடங்குகளும் குளமாயின.

காலையில் பெய்தமழை சற்று ஓய்ந்திருந்தது. மத்தியானத்திற்கு மேல் இலேசான ஊசித்தூறல், திண்ணையில் முடங்கிக்கிடந்தார் சாமிநாதர் கண்கள் மூடியிருந்தன. தூக்கமல்ல. தூக்கத்திற்கும் விழிப்புக்கும் இடைப்பட்ட உணர்வு. எத்தனை விதமான கனவுகள். அத்தனையிலும் திலகாவின் உருவமேதான் எழுந்து நின்றது. சாமிநாதரின் உடம்பு புல்லரித்தது. புரண்டு படுத்தார். அங்கே எழுந்த சந்தடியில் கனவுக் குமியல்கள் விலகி நின்றன. இமை மடல்களின் இலேசான விரிப்பில், கணபதிஐயர் குடையை மடக்கியவாறு திண்ணையைக் கடந்து உள்ளே செல்வது தெரிந்தது.

''வேணீ!'' கணபதி ஐயரின் குரலில் பிணைந்திருந்த கவலையை சுவாமிநாதரால் உணர முடிந்தது. அவரது செவிப்புலன்கள் கூர்மையாகின.

''அப்பா! என்ன இது?'' வேணியின் குரலில் சோகம் சூழ்ந்திருந்தது.

''அது ... இது ஜாதகம் அம்மா! உன்னுடையது''.

''அப்பா!''

''வேணீ! நாம் என்னம்மாசெய்வது? நன்றியை எதிர்பார்த்துச் சாமிநாதனை நான் வளர்க்கவில்லை. ஆனல் உனக்கு அவன்தான் கணவன் என்று இறுமாந்திருந்துவிட்டேன். அவன் உள்ளத்தைப் புரிந்துகொள்ளத் தவறிவிட்டேன். அது தானம்மா நான் செய்த தவறு. உலகில் நினைப்பதெல்லாம் நடந்து விடு

# தவிப்போடு நின்றேன்!

-த. கனகரத்தினம்-

விண்தோய்ந்து விளையாடும்
வரைவிளிம் பிலாங்கு
கண்பொத்திக் கவிமங்கை
காட்சியினில் வந்தாள்
பண்கொட்டி வண்டொன்று
பறப்பதுவே போல்மென்
தென்றலிலே தேன்சேர்த்துத்
தந்திட்டாள் முத்தம்! 1

மஞ்சிடையில் மலைமுகடு
மறையு மெழில் போலென்
நெஞ்சினிலே மறைந்துதிமிர்ந்
தக்கள்ளி நின்ருள்.
கொஞ்சிட்டாள் – குலவிட்டாள்
குளிரருவி நீரால்
நெஞ்சத்தைத் தடவிட்டாள்
நிறைந்துள்ளும் நின்ருள்! 2

மலர்தூவிப் பசுந்தரையில்
மங்கையுடன் நானும்
கலவியிலே அத்துவிதக்
கலப்பினிலே நின்ருேம்!
மலையிடையில் சூரியனும்
நாணி முகம்மறைந்தான்
நிலைமறந்து நெடுநேரம்
நின்றிட்டோ மாங்கே! 3

வானமெலாம் இருள்மூடும்
வளர்ந்த தந்தகாரம்
கானஇசை மிதந்ததங்கு
காரிகையைக் காணேன்?
மீன்கொண்டு ஓர்கொக்கு
மிதப்பதுபோல் நெஞ்சைத்
தான்கொண்டு சென்றிட்டாள்
தவிப்போடு நின்றேன்! 4

கிறதா! கணபதி ஐயரின் குரல உயிரற்று எழுந்தது.

சிதைந்த ஆசைகள் கண்வழிப் பெருகக் கலங்கிநின்ருள் வேணி,

"சாமிநாதனைப் போல் ஒரு பையன் கிடைப்பதற்கு நாம் கொடுத்துவைக்கவில்லை. ஆனலும் இப்போ நான் பார்த்த இடமும் பரவாயில்லை. உன் சம்மதம் ஒன்றுதான் எனக்குத் தேவையம்மா!"

"அப்பா"! என்று விம்மியவளை ஆதரவோடு அணைத்துக்கொண்டார்.

"தாயில்லாமல் உன்னை வளர்த்து விட்டேன்! வளர்த்த மனம் அமைதி காண உன் சம்மதம் ஒன்றுதான் தேவையம்மா!"

"அப்பா! நீங்கள் பார்த்து எது செய்தாலும் அதை நான் ஏற்றுக் கொள்கிறேன்" என்றவள் குலுங்கிக் குலுங்கி அழுதாள். நிறைவேருத ஆசைகளைக் கண்ணீரில் கரைத்து விடுவதைத் தவிர வேறுவழி? சிலிர்த்தெழுந்தார் சுவாமிநாதர். கனவா, இல்லை நனவா? உடல் வியர்த்து வழிந்தது. திண்ணையில் இருந்தவாறே யன்னலுக்கூடாக எட்டி உள்ளே நோக்கினர். கணபதி ஐயரை அங்குக் காணவில்லை. வேணி மட்டும் தூணைப்பிடித்தவாறு நின்றிருந்தாள். சீவிய நுங்கினைப் போன்று விழிகள் பளபளத்தன.

தை பிறந்துவிட்டது. வானம் பழையபடி வெளுத்தது: நீலம் விரிந்து கிடந்தது. வேணிக்குத் திருமணமாகிக் கணவனுடன் போய்விட்டாள் தனிமை வாட்டியது கணபதி ஐயரை. கனவுகள் ஆட்டியது சாமிநாதரை. தில்காவின் உருவத்

தைச் சுமந்து கொண்டு கனவுகள் பிறக்கும் வரை அவருக்குக் கவலை ஏது? அதன் பின்? அந்தயோசனை அவருக்கு எட்டவில்லை. அந்தச் சூனிய உலகத்தை மாயத்திரை போர்த்திருந்ததோ? தண்ணீரில் எழும் குமிழிகளும், தாமரை இலையில் உருண்டு நிற்கும் நீர் முத்துக்களும் என்றும் நித்தியமானவையாகி விடுமா?

அன்று போதுவிரிந்து நண்பகலாகிச் சரிந்தது. வெளித் திண்ணையில் அமர்ந்திருந்தார் சாமிநாதர். எதிரே வடமொழி மந்திர நூல் விரித்தபடி கிடந்தது உதடுகள் உச்சரித்தன. உள்ளம் இச்சையில் ஆழ்ந்து விட்டது.

வீதியின் கோடியில் எழுந்த வண்டி மாடுகளின் சலங்கை ஒலி வர வரப் பெரிதாகி வீட்டு வாசலருகே நின்றது. நிமிர்ந்து பார்த்தார் சாமிநாதர். வண்டியிலிருந்து சிருப்பர் இறங்கி வந்தார். மடிப்புக் குலையாது, இரு கரையிலும் ஜரிகை பதித்த அங்கவஸ்திரம் பள பளத்தது. வெள்ளிப் பூண் பதிக்கப்பெற்ற கைத்தடி கரங்களில் சுழன்றது.

"வாருங்கள்! வாருங்கள்" கணபதி ஐயர் வாசலுக்கு விரைந்து வரவேற்றார். சாமிநாதர் பாயைக் கொண்டுவந்து திண்ணையில் விரித்துப் போட்டார்.

"பேத்தி திலகவதிக்குக் கலியாணம் நிச்சயமாயிருக்கிறது. வருகிற மாதம் ஐந்தாம் திகதி காலை ஆறு மணிக்கு முகூர்த்தம் புரோகிதத்திற்கு உங்களிடம் சொல்லிவிட்டுப் போகலாம் என்று வந்தேன்" சிருப்பர் கூறினார்.



# கூட்டுறவு

—பஸில் காரியப்பர்

சின்னச் சின்னக் கற்களே
சேர்ந்தொன் றாகக் கூடியே
விண்ணுயர்ந்த கோபுரம்
வீதிதோறுங் காண்கிறோம்.

o

நிமிடமென்னும் போதிலே
நேரஞ்சொற்ப மாயினும்
நிமிடமெல்லாங் கூடியே
நீண்டகாலம் பண்ணுதாம்.

o

சின்னச் சின்ன எறும்புகள்
சேர்ந்து செய்த சேவையால்
பென்னம் பெரிய புற்றுகள்
பெருக; பாம்பு வாழ்வதும்.

o

சின்னச் சின்ன நீர்த்துளி
சேர்ந்தொன் றாகக் கூடியே
வண்ணக் கடலு மானதே
வள நதியும் ஆனதே.

o

ஆர்ப்பளவு மண்களே
ஆழியோரந் தன்னிலே
பார்க்க இன்பந் தந்திடும்
பட்டு மெத்தை தந்ததும்.

o

தனியே சிறிசு கூடினாற்
தானே சக்தி கூடுமாம்;
மனிதா வந்து கூடியே
மண்ணை விண்ணாய்ச்
செய்குவாய்.

o

(ஆங்கிலக்கவிஞர் ஜூபிலியா-ஏ-பிளீத்தர் அவர்களின் 'லிட்டில் திங்ஸ் (Little Things) எனுங்கவிதையைத் தழுவியது)

"அவசியம் வருகிறேன், இதை ஒரு ஆளிடம் சொல்லியனுப்பியிருந்தால் போதுமே".

சிருப்பர் எழுந்தார். வண்டி திரும்பியது. சலங்கையொலி மெல்ல மெல்லத் தவழ்ந்து மறைந்தது. சமைத்தெறித்த சிலைபோல் நின்றுர் சாமிநாதர்.

அன்று திலகாவின் திருமணம் முடிந்து. சிருப்பர்வீட்டு வண்டியிலேயே வந்து இறங்கினுர்கள் கணபதி ஐயரும், சாமிநாதரும். கணபதி ஐயர் கோவில் பக்கம் போய் விட்டார்.

தனிமை புலனுகியது சாமிநாதருக்கு. கனவுப் பேழையைத் திறந்து எதையோ தேடினுர். சூனியம் தட்டுப்பட்டது. தனிமையே விஸ்வரூபமெடுத்துப் பயங்கரமாகக் காட்சியளித்தது. இத்தனை நாளும் கண்டுகொண்டிருந்த கனவுகள் எங்கே? கனவுகளின் உயிராய், உயிரின் தோற்றமாய் எழுந்து நின்று, உணர்வுகளின் உவகைக்கும் தவிப்புக்கும் இடையில் அவரை ஆழ்த்திவிட்ட உருவம் சிறைப்பட்ட பின்னர், அவை வெறும்பொய்மைத் தோற்றங்களாய் வெறும் பிரமையாய்க் காட்சியளிக்கின்றனவா? வாழ்க்கையில் எழும் கனவுகள் பொய்யாயின் வாழ்க்கையே பொய்தானே! பொய்யில்தானே பொய் பிறக்கிறது!

சாமிநாதருக்குத் தெளிவு ஏற்பட்டுவிட்டது. பிரமை மறைந்துவிட்டது. "அந்தப் பரமசிவன்கூட உமாதேவியார்மேல் அன்பாயிருக்கிருரே!" வேணியின் குரல் ஒலிப்பது போன்ற உணர்வு.

அநித்திய வாழ்வில் கண்டதென்ன? வேணியின் தூய்மையான அன்பையாவது ஏற்றிருக்கலாம் அல்லவா? ஆனுல் அதை உதறி வெறும் பிரமைக்குள் ஆழ்ந்துவிட்டதே இதயம்.

"வேணி!" என்று அலறவேண்டும்போலிருந்தது சாமிநாதருக்கு.

சிதைந்த ஆசைகளின் பின்னணியில் உடைந்த உள்ளங்கள் அனுபவித்ததை — வேணி அனுபவித்ததை அவரும் அனுபவிக்க வேண்டாமா!

விம்மி விம்மி அழுதார் சாமிநாதர். O




அவளும் அவனும் ஒருவரை ஒருவர் காதலித்தனர். ஆனால் அவள் வேறொருவனுக்கே மாலையிட்டாள். கணவனுடனும் குழந்தைகளுடனும் மகிழ்ச்சியுடன் வாழ்க்கையை நடாத்தியபோது, பழைய காதலனிடமிருந்து பரிதாபமான கடிதம் வருகின்றது...

# கால ஓட்டத்திலும்......!

- மணிவாணன்

அந்தக் கடிதத்தை மீண்டும் ஒருமுறை படித்தேன்.

அன்பார்ந்த நிரோஜினி,

நீ நல்லபடியாக வாழ்வது குறித்து மிக்க மகிழ்ச்சி. கடைசியாக ஒருதடவை உன்னைப் பார்க்கவேண்டுமென்று தோன்றுகின்றது.

மரணத்தின் பிடிப்பினிலே... இன்றே நாளையோ என்ற நிலையில் அந்த ஆவலும் கருகிவிட வேண்டியதுதான்.

—சிவானந்தன்

கடிதத்தைப் பத்திரமாக மடித்து இடுப்பில் செருகிக் கொண்டேன. அவர் கந்தோரிலிருந்து வருகின்ற நேரம். இப்படி அழுது வடிந்த முகத்தோடு நின்றால் ஏன்? ... ... என்ன? ... என்று குடைந்தெடுப்பார்; பாஸ்கரனும் மனோனும் மாமிவீட்டிலிருந்து இன்னும் வரவில்லை. கைக்குழந்தை ரேஜனி தூங்கிக் கொண்டிருக்கிறாள்

பாத்றூமுக்குள் சென்று முகத்தைக் கழுவிக்கொண்டேன் எப்படியும் எரிவு எரிவுதான். கண்ணாடியிலும் அதன்எதிரொளி பளிச்சிட்டது.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

அதை மாற்றுவது?...

என்றோ நான் மறந்து காலம் கடந்து விட்டதைப் பத்து வருடங்களுக்கு மேலாகியும் அவர் இன்னும் மறக்கவில்லையே,

இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்னதாகப் பூரணத்தைக் கண்டேன். என் கணவர் இல்லாத சமயமாகப் பார்த்துச் சிவானந்தத்தைப்பற்றிச் சொன்னாள். அவர் இன்னமும் கல்யாணம் செய்து கொள்ளாமலேயே இருக்கிறார் என்று பூரணம் சொன்னதும் சிறிது துணுக்குற்றேன்.

ஏதோ ஓர் அலை ஓட்டம். அவ்வளவுதான். எனது வாழ்க்கையும், குடும்பமும் அதற்கு மதிப்புக் கொடுக்கக்கூடிய நிலையில் இருக்கவில்லை.

அப்போது பாஸ்கரனுக்கு ஐந்து வயது நிரம்பியிருந்தது. மனோன் கைக்குழந்தை. இந்த இன்பச் சுமைகளுக்கிடையில் எப்போதோ நடந்து முடிந்துவிட்டதை நினைத்து ஏங்குவதற்குப் பைத்தியமா. என்ன?

அது அந்தக் காலம். நல்லது கெட்டதை ஆராய்ந்து நடந்து கொள்வதற்குப் பொறுமையில்லாத துடிதுடித்த பருவம். சிவானந்தத்தை நான் காதலித்தேன். இருவரும் ஒரே பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்களாக இருந்தோம். சந்தர்ப்பம் சூழ்நிலை, பருவம் எல்லாமாகச் சேர்த்து ஓர்வித பிணைப்புக்குள்ளானோம், உணர்வின் ஒவ்வொரு அலையும் காதலின் பரிணமமாக விளங்கியது.

## கறுப்பின் புதுமை.

'கறுப்பி' சிறுகதை நன்ருக இருந்தது. கறுப்பியின் பாத்திரப் படைப்பில் புதுமை ஒன்றும் இணைகிறது. ஒரேவிதமான கதைகள் படித்து வருபவர்க்கு இது பிடித்தமான கதையாக அமையலாம்,

முகத்துவாரம்,
எஸ். இராஜம் புஷ்பவனம்.

நான் முயன்றிருந்தால் அவரோடு வாழ்ந்திருக்கலாம். ஏனே என் மனநிலை மாறியது. பெற்றவர்களுக்கு நல்ல பிள்ளையாக நடந்து கொள்ள முயன்றேனு?... ... எப்படியோ?... ஆனுல்; அவரை நான் மணந்துகொள்ள என் பெற்ருேர் ஒருபோதும் அனுமதி தந்திருக்க மாட்டார்கள். நான் தனித்தவளாய் சொந்தம் பந்தம், சுற்றம் யாவற்றையும் துறந்து போயிருக்கவேண்டும். அந்தத் தனிமையையும் துறவையும் தாங்கிக்கொள்ளக் கூடிய மனேபலம் எனக்கிருக்கவில்லை'

அதன்பின் எத்தனையோ மாற்றங்கள். நல்ல வருமானமும் மதிப்புமுள்ள ஓர் உத்தியோகத்திலிருப்பவருக்கு வாழ்க்கைப்பட்டேன். ஆசிரியத் தொழிலிலும் இருந்து விலகி முற்ற முழுக்க ஒரு குடும்பப் பெண்ணுக மாறவேண்டியதாயிற்று.

இப்போது மூன்று குழந்தைகளுக்குத் தாய்.

சிவானந்தத்தை மணக்க முடியாமல்போன அந்த முறிவு என்னை வருத்திற்ரு ...? இல்லையோ? ... என் கணவர் என்மேல் சொரிந்த அன்பும் ஆசையும் கடந்தவற்றையெல்லாம் நினைத்துப் பார்க்கவே விடவில்லை.

நான் சிவானந்தத்தை ஒரு காலத்தில் காதலித்தேன் என்று என் கணவருக்குத் தெரிந்தால்?... இவரின் அளவுகடந்த அன்பால் கட்டுண்ட போதெல்லாம் அப்போது எனக்கு இந்தப் பயமும் இருந்துகொண்டேயிருந்தது. ஒவ்வொருவேளையும் நினைப்பேன். எப்போது இந்த இன்பத்தில் சூருவளி வீசுகின்றதோ என்று

சிவானந்தம் நல்லவர். அவருக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தின் காரணமாக எனக்கு எந்தவிதத் தீங்கும் செய்ய அவர் முயலவில்லை.

ஆனுல்?...

இந்தப் பத்து வருடகாலத்தில் ஒரு தடவையாவது என்னைக் காணவோ அல்லது கடிதம் எழுதவோ விரும்பாத அவர் இன்று மாத்திரம் ? ... ஐயோ!... அவரின் மரணப்படுக்கையிலா இதை எழுதினுர்? ... அவரின் இந்தக் கடைசி நேர ஆவலும்? ... ... என் நெஞ்சு விறைக்கிறது.

அவரைப்பற்றி எந்தத் தகவலும் தெரியாத காலத்தில், அவர் என்னை மறந்துபோய் வேருெருத்தியை மணந்திருப்பார் என்றுதான் எண்ணியிருந்தேன். முதன் முதலில் பூரணம் சொன்னபோது சிறிது துணுக்குற்றேன். ஆனுலும் துன்பப்பட்டேனு?... அவர் வாழ்வை நிறைவுபெறச் செய்ய நான் முயன்றிருக்கலாம். அவரை வற்புறுத்தி வேண்டுகோள் விடுத்திருக்கலாம். ஏதாவது செய்தேனு...?

நான் முழுவதும் சுயநலக்காரி

யாக இருந்தேன். அது தான் உண்மை

என் உள்ளத்தில் உங்களைத் தவிர இன்னொருத்தருக்கு இடம் கிடையாது. நாம் மணம் செய்து கொள்ள முடியாது போனாலும், மானசீகமாகப் பூசிப்பவளாகவே என்னை நம்புங்கள். இது முற்றிலும் உண்மை." ... ... எப்போதோ நான் சொன்ன இந்த வார்த்தைகள் இன்னும் என் நினைவிலிருக்கிறது. இதனைக் கேட்டபோது அவர் அப்போது எவ்வளவு சந்தோஷப் பட்டார்.

அதன்பின், அவர் எவ்வளவு தூரம் என்னை நம்பியிருந்தார். அவரை நான் இப்படி ஏமாற்றுவேன் என்று அவர் கனவிலும் எண்ணியிருக்கமாட்டார்.

நடந்தது?...

நான் அவரை ஏமாற்றித்தான் விட்டேன், அவர் விரும்பினால் என்ன விரும்பாவிட்டால் என்ன நம்பி ஜீரணிக்க வேண்டித்தான் ஆகிவிட்டது.

மீண்டும் அந்தக் கடிதத்தைப் படிக்கவேண்டும்போல் தோன்றியது. எழுத்துக்களில்தான் எவ்வளவு வேறுபாடு. கோணல் மாணலான இந்தக் கையெழுத்து?...

"மரணத்தின் பிடிப்பிலே இன்றோ நாளையோ?... என்ற நிலையில் அந்த ஆவலும் கருகிவிட வேண்டியதுதான்". நெஞ்சைக் கையால் அமுக்கி அழுத்துகின்றேன். என் உள்ளம் வெடித்துச் சின்னபின்னப்படுகின்றது அந்த மரண ஓலத்தின் தாக்கமா?...

நான் அவரை அவசியம் பார்த்துத் தான் ஆகவேண்டும். இந்தக் கடைசிநேர ஆவலையாவது நான் பூர்த்தி செய்யாது விட்டால்?...

வழி?

முல்லைத்தீவிலிருக்கும் அவரை, எனக்கும் முல்லைத்தீவுக்கும் எந்த வித தொடர்புமில்லாமல் கொழும்பிலிருந்து எப்படிப் போவது?"... என் கணவருக்கு என்னசொல்லி அனுமதி பெறுவது?... அவரிடம் உண்மையைச் சொல்வதா?... ஐயோ!... அதன் கொடூரத் தன்மை!... வேறு காரணம் சொல்வதாயின்?... அது எப்படியும் நான் தனியாகப் போவதற்கு அனுமதி தரமாட்டார் தானும் வருவதாகச் சொல்லுவார். அப்போது?...

ரேஜினி எழும்பி விட்டாள். அழவில்லை. ஏதோ வியப்புற்றவளாய்ச் சுற்றுமுற்றும் பார்க்கின்றாள்.

"என் கண்ணு!... வாடா!... வாடா...! என்ன பார்க்கிறே ... 'அம்மாவைக் காணவில்லையே; என்னை விட்டுவிட்டு இவள் எங்கே போயிட்டாள்' என்று பார்க்கிறியா?... குழந்தையை வாரி எடுத்து நெஞ்சோடு அணைத்துக்கொள்ளுகிறேன்.

அந்த இன்பம்...

---

**தொடர் குறை**

இலங்கையிற் "கலைச்செல்வி" யின் முன்னேற்றத்தைக் கண்டு நான்மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். ஆனால் "கலைச்செல்வி"யில் தொடர் கதைகள் இல்லாதது ஒரு குறை. அக்குறையை நீக்குவீர்கள் என எதிர்பார்க்கின்றேன்.

பதுளை. எஸ்.எம். தாலிஸீன்

புதிய விற்பனையாளர்கள்

**வினாயக ஸ்டோர்ஸ்**
பஸ் நிலையம்,
களுவாஞ்சிக்குடி.

**ஆனந்தா ஸ்டோர்ஸ்**
ஆலி – எல.

நான் இவ்வளவு நேரமும் கனவு கண்டுகொண்டிருந்தேனா?... இந்த இன்பத்தின் முன்னால் எனக்கு அப்படித்தான் தோன்றுகின்றது. ஆனால் இந்தக் கடிதம்?... கடிதம் இருந்தால்தான் என்ன? அதைக் கிழித்து எறிந்துவிட்டால்?...

ஆமாம் கிழித்து விட்டால்?... ஏன் என் கைகள் நடுங்குகின்றன? கடிதத்தைக் கிழித்து எறிந்துவிட்டால் அந்த ஓலம் கேட்காமல் போய்விடுமா?

அவர் கந்தோரிலிருந்து வந்துவிட்டார். 'பப்பா..., ப்பா...ப்பா...! ரேஜினி அவரிடம் தாவிக்கொள்கிருள். அவர் அவளுக்குக் கொடுக்கும் அந்த முத்தம்... என் மனத்துள் அதற்கேன் இவ்வளவு இனிமை?...

காப்பி கொண்டுவந்து கொடுக்றேன்.

"அப்பா காப்பி குடிக்கட்டும், வாங்கோ... வாங்கோடா...

"மா...த்...தே...ன் போ...

"நிரோ, எங்கே பாஸ்கரும் மனோனும்?...

"மாமி வீட்டுக்குப் போனவங்க இன்னும் வரவில்லை.

"இது என்ன உன் முகம் வீங்கிப்போயிருக்கு?...

"வீங்கியிருக்கா...?

"ஆ ... ஆ ...அது என்னவோ. சரி நீயும் புறப்படு நாங்களும் உலாத்துக்குப் போலாம்.

"குழந்தைகள் வந்தால்?...

"அப்படியே போய்க் கூட்டிக் கொண்டு போகலாம்,

புடைவையை மாற்றுகின்றேன். இடுப்பில் அந்தக் கடிதம். கடிதத்தை எடுத்து விரிக்கின்றேன். என் உடல் எல்லாம் நடுங்குகின்றது. என்னைப்பார்க்கவேண்டும்என்ற ஆவலில் அவருடைய மனம் எவ்வளவு பாடு படுகின்றதோ?... நான் வெறும் துரோகி ... நான் வெறும் துரோகி ... வெறும் சுயநலக்காரி...

சிவானந்தத்தைப் பார்க்கப் போவதா? என்னுடைய இந்தப் பாரத்தை அதனால் இறக்கிவிட முடியுமா?

எப்படிப் போவது?...

நான் போவது, என் வாழ்க்கையையே பாரமாக்கி விட்டால்?...

என்னுடைய இந்த இன்பத்தின் முடிவுகாலமா?... ஏன் எனக்கு இந்தக் கடிதத்தை எழுதினார் அவரது அந்த மரணவாசல் ... ... கடைசி நேரத்து அந்த அற்ப ஆவல் ... ஐயோ!— நான் பூர்த்தி செய்ய மாட்டேன். பூர்த்தி செய்யவே மாட்டேன்... ...தெரிந்து கொண்டும் பாலில் விஷத்தைக்கலப்பதா?

திரும்பவும் திரும்பவும் கடிதத்தைப் படிக்கிறேன். இதுஎன்ன? .. எனக்கு வெறி பிடித்து விட்டதா?... திரும்பவும் திரும்பவும் ... திரும்பவும். "அந்த ஆவலும் கருகிவிட வேண்டியதுதான் ... ..."

அது என்ன? ... மரண ஓலமா? ... சந்தேகமே இல்லை; அதுதான். அந்தப் பிடியில் அவர் திணறுகிறார். நிரோஜனி! ...நிரோஜனி! நிரோ ...ஜனி!... என்னையா கூப்பிடுகின்றார்...?

ஐயோ!...

"என்ன நிரோ?... என்னது?... ஏன் குழறுகிறாய்...?

என் உடம்பெல்லாம் நடுங்கு கின்றது. எனக்கு ஆதாரமானதரை வீடு எல்லாமே சுழல்கின்றது. நான் தனித்துப்போய் நிராதரவாய் நிற் கின்றேன் அவர் என்னைப் பார்த்து மிரள மிரள விழிக்கின்றார்.

ஆதாரம் தேடுகின்றேன். நான் மோதி நிலைக்கண்ணாடி நொறுங்கு கின்றது.

"நிரோ... சொல்... என்ன நடந்தது உனக்கு? வாயைத்திறந்து கெதியாய்ச் சொல்லு..." அவர் என்னைத்தாங்கியபடி பதறுகின்றார்.

அந்தக் கடிதம்... நனைந்து போய்க் கைநெகிழ்கிறது. அவர் அதனை எடுத்துவிட்டார்.

வீறிட்டுக் கத்துகின்றேன்.

குழந்தை ரோஜனி திடுக்கிட்டுப் போய் அழுகிறாள். அவளைத் தூக் கிக்கொண்டு ஓடமுயல்கிறேன். முடி யவில்லை. தடார்...

ஐயோ!..

.........

கண்களை மெதுவாகத் திறந்துபார் க்கிறேன். என் கணவர்கவலை தோய்ந் தவராக என் பக்கத்தில் கட்டிலின் ஓரமாகஇருக்கிறார். குழந்தைரோஜனி என்னைப் பார்த்து மிரள விளிக் கிறாள். அவளுக்கு ஒன்றும் புரிய வில்லை.

நான் அவரைப் பார்க்கிறேன் அவர் கண்களை ஊடுருவுகின்றேன். எவ்வளவு நேரம்தான் இந்தப் பார்வை. பரிவோடு என்னை அணைத் துக்கொள்ளுகின்றார். என் உடல் நடுங்குகின்றது.

'நிரோ!.. ...'' அந்தக் குரலில் தான் எத்தகைய பயம் இழையோ டுகின்றது. நான் அவரின் மடியில் முகத்தைப் புதைத்துக்கொண்டு கதறி அழுகின்றேன்.

"காருக்கு ஒழுங்கு செய்யட் டுமா?...

"ஏன்?...

"முல்லைத்தீவுக்குப் போக"

"அத்தான்!... தாயிடம் கதறி அழும் குழந்தையைப்போல் வெம்பி வெம்பி அழுகின்றேன்.

"வீணாகத் துன்பப் படாதே. நானும் வருகின்றேன். பாஸ்கரை யும் மனோஜையும் மாமி வீட்டில்விட்டு விட்டு, ரோஜனியுடன் நாங்கள் மட் டும் போய்ப் பார்த்துவீட்டு வரலாம்.

"வேண்டாம் அத்தான்"

"ஏன்?...

"...................

"சரி உன் இஷ்டம். வீணுக் குக் கவலைப்படாதே. போகவேண்டு மானால் சொல்லு.

"பார்க்கவேண்டாம்.........பார்க் கவே வேண்டாம். இவ்வளவு அன் பும் பெருந்தன்மையும் நிரம்பிய கணவரும் இந்த வாழ்க்கையும் இப் படியே நிலைக்கவேண்டும்'...... என் இதயம் ஓலமிடுகின்றது.

பக்கத்தில் கிடந்த கடிதத்தை எடுக்கின்றேன். இப்போது அதைப் படிக்கவேண்டும் போல் தோன்ற வில்லை.

கிழித்தெறியப்பட்ட அந்தக் கடி தத்தின் துகள்கள் காற்றுவீச்சில் அங்கொன்றும் இங்கொன்றுமாய்ப் பறக்கின்றன.




இளம்பிறை: நிர்வாக ஆசிரியர்– எம். ஏ. ரஹ்மான்; அலுவலகம்: 231. ஆதிருப்பள்ளித் தெரு, கொழும்பு–13

புதுமையும் கவர்ச்சியும்கொண்ட இலக்கிய நூல்களை வெளியிட்டுத் தமிழிலக்கியப் பணியாற்றி வரும் அரசு வெளியீட்டு நிறுவனத்தின் உரிமையாளர் எம். ஏ ரஹ்மான் அவர்களை நிர்வாக ஆசிரியராகவுடைய ''இளம்பிறை'' மாத இதழின் ஈத் மலர் கிடைக்கப்பெற்றோம். இரசிகமணி கனக செந்திநாதன் எழுதிய ''அலை ஓய்ந்தது,'' ரஹ்மான் எழுதிய ''ஈமான்'' ஆகிய கதைகள் குறிப்பிடக்கூடியவகையில் அமைந்துள்ளன. ச. தனஞ்செயராசசிங்கம் அவர்கள் ''குண்டலகேசி, வளையாபதி'' பற்றியெழுதிய ஆராய்ச்சிக் கட்டுரையின் முதற்பகுதி இம்மலரிலுண்டு. ஆசிரியரின் ஆராய்ச்சித் திறனைக் கட்டுரை எடுத்துக்காட்டுகின்றதாயினும்சொற்புணர்ச்சிகள்சில கருத்து மயக்கத்தை ஏற்படுத்துகின்றன. கொண்டோடி சுப்பரின் ''நானும் நரங்களும்'' என்ற பகுதியை ஒரு சில எழுத்தாளர்களால் மட்டுமே புரிந்துகொள்ள முடியும். சேகாதி நயினாப்புலவர் இயற்றிய திருமணக்காட்சி என்னும் நூலை ஜே. எம். எம். அப்துல்காதர் அழகான முறையில் அறிமுகஞ்செய்துவைக்கின்றார். கலாச்சாரங்களும் பழக்க வழக்கங்களும் மாறுபட்டாலும். தமிழ்ப் புலவர்களினதும் இஸ்லாமியப் புலவர்களினதும் கற்பனைகள் பெரும்பாலும் ஒரே மாதிரியாகவே இருக்கின்றன. இறைவனின் ஏகத்துவத்தைப் பற்றிக் கூறும் ''அன்னையிலாயழியாய்'' என்று தொடங்கும் செய்யுள் படிக்கப் படிக்கச் சுவையூட்டுவது. ''திருமணக் காட்சி''யை முஸ்லிமல்லாதார் படிக்கத் தூண்டும் வகையில் ஆசிரியரின் கட்டுரை அமைந்திருக்கின்றது மொத்தம் ஏழு கவிதைகள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. சில இடங்களில் ஓசை முறிவு இருந்த போதிலும் அண்ணல் எழுதிய ''நினைவு'' சிறந்து விளங்குகின்றது. ஈழத்தில் எவ்வாறு இலக்கியப் பத்திரிகையை வெளியிடவேண்டும் என்பதற்கு இலக்கணம் வகுப்பதைப் போன்று வெளியாகும் ''இளம்பிறை''யை இலக்கிய இரசிகர்கள் ஆதரிப்பார்கள் என்பதற்கு ஐயமில்லை.

—எஸ்ஸெஸ்

சுகாதார ஒலி: ஆசிரியர்: யாழ்வாணன்; யாழ்ப்பாண மாநகரசபைச் சௌக்கியத்துறை வெளியீடு, யாழ்ப்பாணம்.

தமிழ் மக்களின் மத்தியிலே சுகாதாரக் கருத்துக்களைப் பரப்பவேண்டும் என்ற நோக்கத்துடன் யாழ் – மாநகரசபையின் சௌக்கியத்துறையினரால் திங்கள் தோறும் இலவசமாக வெளியிடப்படுகின்றது ''சுகாதார ஒலி''. கடைசியாக வெளிவந்த மாசி இதழில் டாக்டர் செ. சிவஞானசுந்தரம் அவர்களின் ''எல்லோரும் இன்புற்று வாழ'' என்ற கட்டுரை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார விதிகளை எளிமையான தமிழில் எடுத்து விளக்குகின்றது. சுதா எழுதிய ''தாயாகப் போகும் பெண்களுக்கு'' என்ற கட்டுரையைத் தாயாகப்போகும் பெண்கள் அனைவரும் படிக்கவேண்டும். மாணவர்களையும் மற்றையோரையும் இப்பத்திரிகையைப் படிக்கச் செய்வதற்கு நாட்டின் நல்வாழ்வில் நாட்டமுடைய அனைவரும் முயலவேண்டும்.

—எஸ்ஸெஸ்

# ஹலோ……… இது ஸ்டூடியோ!

''கலைச்செல்வி'யின் சினிமா ரசிகர்களே, வணக்கம். இங்கே சென்னையிலிருந்து பேசுகிறேன். முதலில் என்னுடைய வாழ்த்துக்களை ஏற்றுக் கொள்ளுங்கள். இங்கே நடைபெற்ற படவிழாவில் உங்கள் நாட்டுச் சிங்களப்படம் ''கம்பெரலிய'' முதற் பரிசு பெற்றதே, அதற்காகத்தான் வாழ்த்துக்கள். ஆமாம், உங்களுடைய சிங்களச் சகோதரர்கள் முன்னேறிவிட்டார்கள். நீங்களும் அவர்களைப்போல், சினிமாத்துறையில் இறங்கி, இங்கேயுள்ள எங்களையும் மகிழ்விக்கலாமே!

மக்கள் திலகத்தின் படங்களில் கவிஞர் திலகத்தின் பாடல்களைக் கேட்க முடியவில்லையே என உங்களைப் போல் நானும் ஏங்கிக் கொண்டிருந்தேன். அந்த ஏக்கத்தைப் போக்கும் இனிப்புச் செய்தியையே முதன் முதலாக உங்களுக்குச் சொல்லப்போகின்றேன். அரசியல் கொள்கை காரணமாக, கண்ணதாசன் தி. மு. க. வையும் புரட்சி நடிகரையும், தாக்கிப் பேசினர். அதைப் பொறுக்காத புரட்சி நடிகர், தான் நடிக்கும் படங்களுக்குக் கண்ணதாசன் பாடல்கள் எழுதக்கூடாது என்றார். படாதிபதிகளும் ரசிகர்களும் இந்தப் போட்டியைக் கண்டு பயந்தார்கள். சினிமா உலகில் ஏற்பட்ட இந்தப் பிளவை நீக்கும்படி பலர் புரட்சி நடிகரிடமும் கவிஞரிடமும் மாறிமாறிச் சென்றார்கள். பலரின் முயற்சி ஓராண்டின் பின் இப்போது பலன் அளித்து விட்டது. நடிகரும் கவிஞரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து விட்டார்கள். எம். ஜி. ஆர். நடிக்கும் ''ஆயிரத்தில் ஒருவன்'' என்ற படத்திற்குக் கண்ணதாசன் பாடல்களை எழுதிவருகின்றார். இந்தப் படத்தைப் பத்மினி பிக்சர்ஸ் தயாரித்து வருகின்றனர். படம் பத்தோடு பதினொன்றாகத்தான் இருக்குமா, அல்லது ஆயிரத்தில் ஒன்றாகவே இருக்குமா, என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

அகிலனின் ''பாவை விளக்கி''ல் உமாவாகத் தோன்றி உங்களின் நெஞ்சில் இடம் பெற்ற எம். என். ராஜம் நீண்டநாள் ஓய்வெடுத்துவிட்டு, மீண்டும் திரையுலகிற்கு வருகின்றார். எதிராஜ் மூவீசார் தயாரிக்கும் ''கமலம்'' என்ற படத்தில் எஸ். வி. சகஸ்ரநாமம், டி. எஸ். பாலையா, நாகேஷ் முதலியோருடன், ராஜம் நடிக்கின்றார்.

அமரகவி பாரதியாரின் பாடல்களின் அடிகளைத் தலைப்பாகக் கொண்டு பல நாவல்களும் சிறுகதைகளும் தமிழில் வெளிவந்துள்ளன. சில ஆண்டுகளுக்கு முன்னர் 'ஓடிவிளையாடு பாப்பா'' என்ற பெயரில் ஒரு படம் தயாரானதுநினைவிருக்கின்றதா? ''தீராத விளையாட்டுப் பிள்ளை'' என்றொரு படம் இப்போது வெளிவரவிருக்கின்றது. ''கோகுல் காசோர்'' என்ற இந்திப் படமே ''தீராத விளையாட்டுப் பிள்ளை'' என்ற பெயரில் 'டப்' செய்யப்படுகின்றது. ஏ. எல். எஸ். புரடக்‌ஷன்ஸார் இவ்வேலையை மேற்கொண்டிருக்கின்றனர்.


இப்போதைய எழுத்தாளர்களும் பேச்சாளர்களும், எவ்வளவுதான் புதுமை, புரட்சி என்று கதறினலும்.


ரசிகர்களின் மத்தியில் இராமாயணம், பாரதம் போன்ற கதைகளுக்கு இருக்கும் 'மவுசு' இன்னமும் குறைந்ததாகத் தெரியவில்லை. சம்பூர்ண ராமாயணம், சம்பூர்ண மஹாபாரதம் கர்ணன் போன்ற படங்கள் உங்கள் நாட்டில் நல்ல வசூலைக் கொடுத்தனவாமே! பாண்டவர்களுக்கும் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா விற்குமிடையே யுள்ள நெருங்கிய உறவைச் சித்தரிக்கும் வகையில் "ராஜசூயம்" என்ற பெயரில் ஒரு படம் இங்கே உருவாகின்றது. "கர்ணன்" படத்தில் கண்ணனாக வந்து தன் கண்ணசைவால் உங்களைக் கவர்ந்தாரே ராமராவ், அவர்தான் இந்தப் படத்திலும் கிருஷ்ணனாக நடிக்கிறார். பாண்டவர்க்குத் துணை நின்று பாரதத்தையே ஆட்டியசைத்த அந்தக் கண்ணனைப் போன்று, "ராஜசூய"த்தை ஆட்டியசைக்கப் போகின்றார் இந்தக் கண்ணன் (ராமராவ்) ஆமாம், என். டி. ராமாராவ்தான் இதன் டைரக்டர். ஓ. ஏ. கே. தேவர். டி. ஆர். மகாலிங்கம், கே. ஆர், விஜயா முதலியோர் நடிக்கின்றனர்.

நடிகர் திலகத்தைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையே எனக்கோபிக்கின்றீர்களா? நடிகர் திலகமும் தேவிகாவும் நடித்த "அன்புக்கரங்கள்" இங்கே சக்கைப்போடு போடுகின்றது. சிவாஜியின் நடிப்பை ஒரு புதிய கோணத்தில் பார்க்கலாமாம். எனக்காக ஒரேயொரு 'சீட்' பிடித்துவைத்திருப்பதாக இப்போது செய்திவந்திருக்கின்றது போய் வரட்டுமா...?

—கலைஞு

இப்போது சிலோன் என்டர்டெயின்மென்ட்ஸ் திரைகளில் ஓடிக்கொண்டிருக்கும் ஆயிரம் ரூபாய்" படத்தில் ஜெமினியும் ராகினியும் இப்படிக் காட்சியளிக்கின்றனர்.






தி. இராஜன் 132, லோவர் வீதி, பதுளை.

கே; நான் கவிதைகள், கட்டுரைகள் அனுப்பினால், 'கலைச்செல்வி' யில் பிரசுரிப்பீர்களா?

ப; "கலைச்செல்வி" ஆசிரியருக்கு அனுப்பிப் பாருங்கள். தரமானவற்றை நிச்சயமாகப் பிரசுரிப்பார். கேள்விகளுக்குப் பதிலளிப்பதுதான் என் வேலையே தவிர, கவிதைகள் கட்டுரைகளைப் பிரசுரிப்பதாக உறுதிமொழி கொடுப்பதன்று!

கே: யாழ்ப்பாணத்துக்கு வந்தால் தங்களைப் பார்க்க முடியுமா?

ப: தங்களின் அதிர்ஷ்டத்தைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு வேறு வழி இல்லையா?

தம்பிராஜா, கொழும்பு–11

கே: தங்கள் மகளின் பெயர் தானே ''கலைச்செல்வி?''

ப: ஆஹா! மகா பெரிய உண்மையைக் கண்டுபிடித்துவிட்டீர்! 'சபாஷ்' என்று சொல்லி என் பெயரால் உம் முதுகில் ஒரு தட்டுத் தட்டிக்கொள்ளும்!

குஞ்சு, யாழ்ப்பாணம்.

கே: கலையரசி பத்மினி இனிமேல் படங்களில் நடிக்கமாட்டாரா?

ப: ஏன் மாட்டார்? ''அலெக்சாண்டரும் சாணக்கியனும்" என்ற படத்தில் நடிக்க அவர் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கின்றார். இந்திய–ஜெர்மன் கூட்டுத் தயாரிப்பில் இப்படம் உருவாகும்.

ஸ்ரீ இராமநாதன் வெள்ளவத்தை

கே: இந்தியாவுக்குக் கம்யூனிஸ ஆபத்துச் சீனாவிலிருந்தா, ரஷ்யாவிலிருந்தா வரும்?

ப: இந்த இரண்டு இடங்களிலுமிருந்து இப்போதைக்கு ஆபத்து வராது. கேரளத்திலிருந்துதான் வரும்போலத் தெரிகிறது!

டேவிற் வல்லிபுரம் திருநெல்வேலி

கே: சிறுவயது முதல் ஒருவனை நேசித்து,அவனையும் நம்ப வைத்து

பின் (உத்தியோகத்திற்கும் பதவிக்கும்) ஆசைப்பட்டு வேறொருவனை மணக்கும் பெண்ணைப்பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: சிறுவயதில் நேசித்தவனையே கல்யாணமும் செய்து, பின்னால் வேலி பாய்வதைவிட, கல்யாணத்திற்கு முன்னதாகவே தன் சுயரூபத்தை வெளிப்படுத்தினாளே, அந்த அளவிற்குக் காதலன் மீது கருணை கொண்ட காரிகை என்பேன்!

கே. எல். கன்னியப்பன், யோங் பொங், மலேசியா.

கே: தங்கள் பத்திரிகையிலுள்ள விலாசத்தை வெட்டி ஒட்டினால் தான் கேள்விகளை ஏற்பீர்களா?

ப: இனிமேல் அந்த நிபந்தனை இல்லை. தங்களைப் போன்ற பல பேர்களின் வேண்டுகோளின்படி இந்த நிபந்தனையை விட்டுவிட்டோம். விரும்புவோர், தம் கேள்விகளைத் தெளிவாக, அழகாக மையினால் அஞ்சலட்டையில் எழுதியனுப்பினாற்போதும். கேள்வி கேட்பவரின் சொந்தப் பெயரும் சரியான முகவரியும் அஞ்சலட்டையில் இருப்பது அவசியம்!

கே: பெரிய மனிதன் என்றால் யார்?

ப: உருவத்தாலன்றி உள்ளத்தால் உயர்ந்தவரையே பெரிய மனிதர் என்கிறோம். காந்தியைப் பெரிய மனிதர் என்கிறோம். நேருவைப் பெரிய மனிதர் என்கிறோம். கென்னடியைப் பெரியமனிதர் என்கிறோம். குருஷேவைப் பெரியமனிதர் என்று சொல்ல ஆரம்பித்தோம். இதற்கெல்லாம் என்ன காரணம் எனச் சிந்தித்துப் பாருங்கள்.

கே: ஒரு மனிதன் தன் தவற்றை எப்போதும் திருத்திக் கொள்கின்றான்?

ப: தான் செய்த தவறையும் உணர்ந்து, அதைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்பதையும் உணரும்போது!

வி. எஸ். அறிவழகன் கரவெட்டி

கே: தமிழன் ஒவ்வொருவனும் தன்மானமுடன் வாழ வழி என்ன?

ப: 'தன் நிலையில் தாழாமையும் தாழ்வு வந்தவிடத்து உயிர் வாழாமையுமே மானம்' என்கின்றனர் பெரியோர். தென் இந்தியாவில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போரில், வீர வாலிபர் சிலர் தம் உயிர் நீத்து, மானம் காத்தார்கள் அல்லவா? அத்தகைய மனப்பக்குவம் அனைவர்க்கும் ஏற்பட்டால், தன் மானத்துடன் வாழலாம்!

ஆ. அன்பழகி, லுணுகலை.

கே: ஜெயகாந்தனின் "உன்னைப் போல் ஒருவன்" என்ற படம் இலங்கையில் திரையிடப்படுமா?

ப: நடனமும் பாட்டும் இல்லாத படத்தை இறக்குமதி செய்வதற்கு இந்நாட்டு பட விநியோகஸ்தர்கள் விரும்புவார்களா என்பது கேள்விக்குரியது. ஏ. வி. எம் தயாரிப்பு என்றபடியால் "அந்த நாள்" வந்தது. எழுத்தாளரின் தயாரிப்பான இப்படம் எந்த நாளில் வருமோ, இருந்துதான் பார்க்கவேண்டும்!

பி. எம். முனாஸ், எருக்கலம்பிட்டி.

கே: முட்டாள் பயலையெல்லாம் தாண்டவக்கோனே, காசு முதலாளியாக்குதடா தாண்டவக்கோனே— என்பதன் கருத்து என்ன?

ப. இது விளங்கவில்லையா? முட்டாள் பயலையெல்லாம் பி. எம். முனாஸே, காசு முதலாளியாக்கு

தடா — பி. எம் முனுஸே! என்பது தான் கருத்து!

கே: நேருவின் அரசியல் வரலாற்றைச் சுருக்கமாகத் தாருங்கள்?

ப: சீமான் வீட்டுக் குழந்தையாகப் பிறந்தார். சுயநலம் துறந்து, நாட்டின் சுயராச்சியத்திற்காகவும் சுபீட்சத்திற்காகவும் உழைத்தார். சேவையின் சிகரமாக உயர்ந்தார். அன்பையும் சமாதானத்தையும் விரும்புவோரின் இதய சிம்மாசனங்களில் இன்று செங்கோலோச்சுகின்றூர்.

எம். எஸ். காந்தன், ஆலி எலே.

கே: உலகிலுள்ள எல்லா நோய்களுக்கும் மருந்து கண்டுபிடித்துவிட்டார்களா?

ப: ஒரு பக்கத்தில் மருந்துகளைக் கண்டுபிடிக்க, மறுபக்கத்தில் புதுப் புது நோய்கள் தோன்றிக் கொண்டேயிருக்கின்றன. மகா பயங்கரமான புற்றுநோய்க்கும் விரைவில் மருந்து கண்டுபிடித்து விடுவார்கள் என நம்பலாம். ஆனுல் எங்கள் நாட்டு இளைஞர்களைப் பீடித்துள்ள சினிமாப் பித்தத்திற்கு இந்த நூற்ருண்டில் மருந்து கண்டுபிடிக்க முடியாது போலத் தெரிகின்றதே!

க. சுதர்சனன், துன்னுலை வடக்கு, கரவெட்டி.

கே: சுயநலத்தின் அடிப்படையில் தானே பொதுநலம் இருக்கிறது?

ப: உண்மைதான் — ஓரளவிற்கு; ஒரு சிலரைப் பொறுத்தவரையில்! குளத்திலுள்ள பாசியை மீன் சாப்பிடுகின்றது. அது சுயநலம். பாசியை மீன் சாப்படுவதால், குளம் தூய்மையாகின்றதே இது பொது நலம்!

ஜெ. கா. செல்வராஜன், மக்காதி வீதி, கொழும்பு.

கே: நான் காதல் மணம் செய்தவன். கல்யாணம் செய்து ஐந்து ஆண்டுகள் ஆகின்றன குழந்தைகள் பிறந்தால், தன் அழகு போய் விடும் என்று என் மனைவி பயப்படுகின்ருள் இதனுல் எங்களுக்கிடையே பிளவு ஏற்பட்டுவிடுமோ என நான் பயப்படுகின்றேன் இந்தப் பிரச்சனை தீர ஒரு வழி கூறுவீர்களா?

ப: உங்கள் மனைவியின் பயம் ஆதாரமற்றது என்பதை அவளுக்கு உணர்த்துங்கள். மேனுட்டில் அழகு ராணிப் போட்டியொன்று நடைபெற்றது. பல நாடுகளின் அழகிகள் அதில் பங்குபற்றினர். அவர்களிற் பலர் பதினறு வயதிற்கும் பதினெட்டிற்குமிடைப்பட்ட பருவமங்கையர். ஆனுல்முதற் பரிசு யாருக்குக் கிடைத்தது தெரியுமா? எட்டுப்பிள்ளைகளின் தாயான மேரி என்றபெண்ணுக்கு. இந்த மேரியின் மூத்த மகளும் இதே போட்டியில் பங்குபற்றித் தாயிடம் தோற்றுவிட்டாள். ஏற்கனவே நடைபெற்ற 19 அழகுராணிப் போட்டிகளில்இந்த மேரி வெற்றியீட்டினுள். குழந்தைப் பேற்றினுல் அழகு அதிகரிக்கும் என்பதைத்தானே இது காட்டுகின்றது.

சு. நாகேந்திரம், 3ம் கட்டை, கல்வியங்காடு.

கே: ஒரு மாணவன் தன் வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானுல் என்ன செய்யவேண்டும்.?

ப: நன்கு கற்கவேண்டும். கற்க வேண்டிய அனைத்தையும் கசடறக் கற்றபின், அவற்றின்படி நிற்கவேண்டும் என மிகத் தெளிவாக கூறி

யிருக்கின்றார் திருவள்ளுவர். ஆனால், இந்தக் காலத்தில் அவருடைய திருக்குறளை யார் படிக்கிறார்கள்? இக்குறளின் கருத்தை வைத்து, இனிமையான பாட்டொன்று எழுதி, 'வயது வந்தவர்களுக்கு மட்டும்' என்றுள்ள சினிமா ஒன்றில் புகுத்தி, "மற்னி ஷோ"வில் படத்தைக் காட்டினால்தான் இக்கால மாணவர்களின் நெஞ்சில் அப்பாட்டுப் பதிகின்றது!

இரா. சண்முகம், அம்புகம் வீதி, நாவலப்பிட்டி.

கே: தங்கத்தாத்தா சோமசுந்தரப் புலவரின் வாரிசு என ஈழநாட்டில் யாரைக் குறிப்பிடலாம்?

ப: சோமசுந்தரப் புலவர் அவர்களின் சிறந்த கவிதைகளைத் தேர்ந்தெடுத்து, தெளிவும் சுவையும் நிறைந்த தன் சொற்பொழிவுகளின் மூலம் தமிழ் இரசிகர்களுக்கு அவற்றை அறிமுகம் செய்துவைத்த பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள், சமீபத்தில் வெளியான வித்துவான் க. வேந்தனார் அவர்களின் கவிதைத் தொகுதிக்கு எழுதிய சிறப்புரையில், "விபுலானந்த அடிகளின் வாரிசு புரிவர்மணி என்பது உறுதியாகிவிட்டது. சோமசுந்தரப் புலவரின் வாரிசு யசர் என்பது இப்போது தெளிவாகிவிட்டது" என்று குறிப்பிட்டுள்ளார். சமன் செய்து சீர் தூக்கும் கோல் போன்று விளங்கும் பண்டிதமணி அவர்களின் தீர்ப்புக்கு அப்பீல் கிடையாது; அவசியமில்லை.

ஏ. எச். சின்னலெவ்வை, தல்கஸ்பிடிய, அறனயக்க.

கே: உலகில் எந்த மதத்தினர் அதிகம்?

ப: நவசீனவிலுள்ள கொம்யூனிஸ்டுகளும் பௌத்தர்களே என்பதை ஏற்றுக்கொண்டால், உலகில் பௌத்த மதத்தினரே அதிகம்!

நா. பகீரதி, மெயின் வீதி, றக்குவானை.

கே: சில எழுத்தாளர்களின் கதைகளைத் தமிழ்ப்படத் தயாரிப்பாளர்கள் திருடுகின்றார்களல்லவா? இதைப் போன்ற இழிவான செயல் இந்திப் படவுலகில் இடம்பெறுவதுண்டா?

ப: சமீபத்தில் ஒரு திருட்டு வழக்கு வந்துள்ளது. கிரிஷன் குமார் நூதன் என்ற இந்தி எழுத்தாளர் பிரபல டைரக்டரும் தயாரிப்பாளருமான சாந்தாராம் மீது வழக்குப் போட்டுள்ளார். தான் எழுதிய "யாது கார்'' என்ற கதையைத் திருடியே சாந்தாராம் 'கீத் காயா பத்ரோனே" என்ற படத்தைத் தயாரித்திருக்கிறார் என இந்த எழுத்தாளர் குற்றஞ்சாட்டியிருக்கின்றார். சினிமாகாரருக்கும் திருடர்களுக்கும் இரவுதான் கைகொடுக்கின்றது. அதனாற்றான் சினிமாக்காரரே திருடர்களாகிவிட்டார்களோ!

எஸ். எம். தாலிமீன், 13/15 பசார் வீதி, பதுளை.

கே: இலங்கையில் விஞ்ஞானம் முன்னேறவேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

ப: விஞ்ஞானம் கற்றால் அதிக சம்பளமுடைய உத்தியோகம் பெறலாம் என்ற ஆசை பலரிடம் இருக்கின்றதேயன்றி, விஞ்ஞானத்தினால் மனித சமுதாயத்தை முன்னேற்றலாம், முன்னேற்றவேண்டும் என்ற உணர்வு இருப்பதாகத் தெரியவில்லை. இந்த உணர்வு மக்களுக்கு ஏற்பட

வேண்டும். கொழும்பிலுள்ள சில அன்பர்கள் "அறிவொளி" என்ற பெயரில், எளிய இனிய தமிழில் விஞ்ஞான ஏடொன்றை வெளியிடுகின்றார்கள், அவர்களின் இப்பணிக்கு மக்களாதரவு பெருகவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, விஞ்ஞானத்திற்கும் சமயத்திற்குமிடையே நெருங்கிய தொடர்பு ஏற்படுத்தப்பட வேண்டும்.

பொ. இரா சதுரை,

ஆனைக்கோட்டை.

கே: 25 ஆண்டுகளில் யாழ்ப்பாணம் பாலைவனமாகிவிடும் என்கிறார்களே, தங்களின் கருத்து என்ன?

ப: இதைப்பற்றிக் கூறுவதற்கு நான் மண்ணியல், நீரியல் நிபுணன் அல்லன். இனியாவது, யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குள் குடங்கியிருக்கும் மக்கள், மறத்தமிழர் வாழ்ந்த வன்னிப் பகுதியிற் குடியேறி அதைப் பொன்விளையும் பூமியாக்குவார்களா என்பதைப் பார்ப்போம்!

ப. தெய்வநாயகம்,

திருகோணமலை.

கே: இப்போதைய இந்தியப் பிரதமர் லால்பகாதூர் சாஸ்திரி தானே!

ப: ஆமாம். அதிலென்ன சந்தேகம்? ஆனால் ஆசிய ஜோதி நேருவை இன்னமும் பலரால் மறக்கவே முடியவில்லைப் போலத் தெரிகிறது. பாரதப் பிரதமர் என்ற தொடரை உச்சரித்தவுடன், பக்கத்திலே நேருவின் பெயர்தான் ஓடிவருகின்றது! சமீபத்தில் இலங்கை வானொலியிற் செய்தி வாசித்த நண்பர் ஒருவர் பாரதப் பிரதமர் நேரு என்றே குறிப்பிட்டுவிட்டுப் பின் திருத்திக்கொண்டார்!

ஏ. ஆர். அபூபக்கர், மெயின் வீதி, கல்முனை.

கே: சென்ற இதழ் "பலதும் பத்தும்" பகுதியில் பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை பலாலி ஆசிரிய கலாசாலையிலிருந்து ஓய்வு பெற்று விட்டார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அவர் இப்போதும் அங்கே விரிவுரையாளராக இருக்கின்றார். என என் நண்பன் எழுதியுள்ளான். நண்பனின் கூற்றுத் தவறு?


ப: உங்கள் நண்பன் எழுதியதில் தவறில்லை. "பலதும் பத்தும்" பகுதியில் வந்த குறிப்பிலும் பிழையில்லை. பண்டிதர் அவர்கள் ஓய்வு பெற்றுவிட்டது உண்மைதான். ஆனால் அவர் விட்டுச்சென்ற இடத்தை நிரப்புவதற்குத் தகுதியானவர்கள் இன்னமும் கண்டுபிடிக்கப்படாததனால், அவரே இப்போது பகுதிநேர விரிவுரையாளராகக் கடமையாற்றுகின்றார்!

செல்வி ஆனந்தி குமாரசாமி, நீர்கொழும்பு.

கே: என் அபிமான எழுத்தாளர் மணிவண்ணன் அவர்களின் கதையொன்றை "கலைச்செல்வி"யில் வெளியிடுவீர்களா?


ப: சென்ற ஆண்டில் வெளியான "கலைச்செல்வி" பொங்கல் மலரில் அவருடைய "புதிய பாலம்" என்ற கதை இடம் பெற்றதே, தாங்கள் படிக்கவில்லையா? கதையொன்று அனுப்பும்படி மீண்டும் ஆசிரியர் அவருக்கு எழுதியிருக்கின்றார். "கலைச்செல்வி" யிடம் உண்மையான அபிமானமுடைய அவர் கதையை அனுப்பிவைப்பார் என்றே நம்புகின்றேன். இப்போது அவர் "கல்கி" யிலிருந்து விலகிவிட்டார். "தீபம்" என்ற பெயரில் ஒரு புதிய பத்திரிகையை வெளியிட முயன்று வருகின்றார். ஆதலால் கதை அனுப்புவதற்குத் தாமதம் ஏற்படலாம்!

## உங்கள் மேனியின் மினுக்கத்திற்குப் புதுவாழ்வு



நவீன வாழ்க்கை முறை வெகு கஷ்டமானது. தூசு, உஷ்ணம், வியர்வை ஆதியனவற்றின் தாக்குதலிலிருந்து உங்கள் சருமத்தைப் பாதுகாப்பதற்கு, ஆரோக்கியத்தை விருத்தி செய்யும் இயற்கையான எண்ணெய் வகைகள் தேவை. ராணி சந்தன சோப், இந்தப் பாதுகாப்பையளித்து, உங்கள் மேனியின் மினுக்கத்திற்குப்புத்துயிர் ஊட்டுகிறது. ராணி சந்தன சோப், சருமத்தை ஊடுருவிச்சுத்திகரிக்கிறது-மறந்து விடாதீர்கள்;

ஊடுருவிச் சுத்திகரிக்கிறது



# ராணி சந்தன சோப்

இன்றே எழுதி,
ராணி பரிசுத்திட்டப்
புத்தகத்தைப் பெறுங்கள்

சுதேசி இண்டஸ்ட்ரியல் வேர்க்ஸ் லிமிட்டெட்,
தபாற் பெட்டி 21, கொழும்பு

GC/S/2



கலாதேவி அச்சகம் புகையிரத வீதி, சுன்னுகம்.


விலையுயர்ந்த மூலப்பொருட்களைக்கொண்டு
சுகாதாரமுறைப்படி சுத்தமாக
நவீன இயந்திரங்களினால் தயாரிக்கும்
BABY BRAND
பேபி மார்க் ஸ்பெஷல்
பானங்களையே அருந்துங்கள்
எல்லா இடங்களிலும் கிடைக்கும்
தயாரிப்பாளர்கள்
சுப்பிரமணியம் சோடாக் கம்பெனி
வல்வெட்டித்துறை
போன் : 97.
தந்தி : SODA
கிளை : ருஜாஸ்ரோர்ஸ்
2/B ஸ்ரான்லி ரேட்
யாழ்ப்பாணம்
போன் : 313.
தந்தி : ESVES.

KALAICHELVI
Registered as a Newspaper in Ceylon
MAY 1964

நிறைந்த விளைச்சலுக்கு
சிறந்த நீர்ப்பாய்ச்சும் பம்ப்

# அல்கன்



ஆகக்கூடுதல் விளைச்சல் நல்ல நீர் பாய்ச்சலில் பொறுத்திருக்கிறது. அல்கன் பம்புகள் உங்களுக்கு இந்த சேவையை அளிக்கிறது. வேறு எந்த பம்பும் செய்யமுடியாத விலை மதிப்பற்ற சேவையை அளிக்கிறது.

விஸ்தாரமான ஏக்கர்களுக்கு நீர் பாய்ச்ச அல்லது ஆகக் கூடுதல் நன்மை பெற அல்கன் பம்புகளே ஆகச் சிறந்தது. கொடுக்கும் பணத்திற்கு சிக்கனமான ஆகச் சிறந்த பம்பு. விபர [illegible]க்கும், இயக்கி காட்டுவதற்கும் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும் அல்லது நேரில் விஜயம் செய்யவும்.

யூனைற்றெட் ட்ரக்டர் & எக்யுப்மென்ட் லிமிட்.
457, யூனியன் பிளேஸ், — கொழும்பு.

**United Tractors & Equipment Ltd.**
**COLOMBO 2.**